1046

குண்டூசி

டிசம்பர்.. எட்டு அணா.

கெம்பராஜ்

ராஜா விக்கிரமா

VIJAYA PRODUCTIONS
விஜயாவின்...
பாதாள பைரவி
டைரக்ஷன்
K.V. ரெட்டி, B.SC (HONS)
Produced by- NAGI REDDI - CHAKRAPANI...

மாடர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட்

படத்தில் நடிக்கத் திறமையும் விருப்பமும் உள்ள இளம்
ஆண், பெண்கள் மனுச் செய்து கொள்ளலாம்

தேவையான யோக்கியதாம்சங்கள்

(1) நல்ல திரேக ஆரோக்யம் (2) வசீகரத் தோற்றம் (3) நல்ல அழகான முகவெட்டு

கீழ்க்கண்ட விவரங்களை தெளிவாக குறிப்பிடவேண்டும்

(1) வயது, (2) உயரம், (3) படிப்பு, (4) தாய்மொழி, தெரிந்த இதர மொழி, (5) பாடும் திறமை, நடனமாடும் அனுபவம் (ஏதாவது இருந்தால்) (6) நாடக மேடை அனுபவம் (ஏதாவது இருந்தால்)

சமீபத்தில் எடுத்த பாதி அளவுள்ள 3 புகைப்படங்களும், ஒரு முழு உருவப் படமும் சேர்த்து அனுப்பவேண்டும்.

மனுதாரர்கள் நேரில் அழைக்கப்பட்டால் அவர்கள் சேலம் வரவேண்டும்.

முக்கிய பாகத்தை ஏற்று நடிப்பதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ரூ. 2000/- வரை மாதச் சம்பளம் எதிர்பார்க்கலாம்

கீழ்க்கண்ட விலாசத்துக்கு மனுச்செய்யவும் :—

புரொடக்ஷன் டிபார்ட்மெண்டு,
தி மாடர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட்,

சேலம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
30 DEC 1950
MADRAS
359

ஏஜண்டுகள் தேவை!

மங்கையின் முத்தம்

எழுதியவர் :
ஆர். எஸ். மணி

கட்டழகி ஸல்மாவின் காதல் உணர்ச்சிகளையும் காமலீலைகளையும் படம் பிடித்துக் காட்டும் ஒரு காதல் கதை. 1/16 டபிள் கிரௌன் அளவில் 32 பக்கங்களுடன், கவர்ச்சி மிகுந்த மூவர்ண அட்டைப் படத்துடன் கூடியது.

விலை 4 அணு

கமிஷன் 33 1/3% உண்டு. தனிப் பிரதி வேண்டுவோர் 4 அணு தபால் ஸ்டாம்பு அனுப்பிப் பெறலாம். வி. பி. பி. உண்டு.

ஞானமணிப் பிரசுரம் - சென்னை 17.

இந்தியாவில் மிகப் பெரிய
பட்டணம் பொடி தொழிற்சாலை

THE LARGEST SNUFF
FACTORY IN MADRAS



N.V. SHUNMUGAM & Co.
MADRAS SNUFF
HIGHLY SPOKEN BY THE PUBLIC.

என். வி. ஷண்முகம் கம்பெனியார்
தபால் பெட்டி 555 — மதருஸ்.

134128

இனும்! இனும்! இனும்!

ஜாலக் கண்ணுடி

இந்த ஜாலக் கண்ணுடி வசீகரண சாஸ்திர முறைப்படி தயாரிக்கப்பட்டது. இந்தக் கண்ணுடியில் பார்த்தால், உங்கள் நிகழ்காலம், இறந்தகாலம், எதிர்காலம் ஆகிய மூன்றையும் சரியாகத் தெரிந்து கொள்ளலாம். இறந்த உறவினர்களைக் காணலாம்; அவர்களுடன் பேசலாம். காணுமற்போன சாமான்களோ, பணப் புதையலோ உள்ள இடங்களை அறியலாம். ஒரு காரியத்தில் வெற்றி கிடைக்கும் கிடைக்காது என்பதையும் இது தெரிவிக்கும். காதல், உத்தியோகம், வியாபாரம் வழக்குகள், பரீக்ஷை முதலியவைகளில் வெற்றி கிடைக்குமா என்பதை இக் கண்ணுடி தெரிவிக்கும்.

விலை : ஸ்பெஷல் ரகம் ரூ. 4—8—0 விசேஷ ஸ்பெஷல் ரகம் ரூ. 10. தபாற் செலவு ரூ. 1 கூடுதல். பலனில்லையேல் பணம் வாப்பீஸ்.

இனும் : இந்தக் கண்ணுடி வாங்கும் ஒவ்வொருவருக்கும் ஸ்பெஷல் "ஜால மோதிரம்" இனுமாக அனுப்பப்படும். இந்த மோதிரத்தை அணிந்தால் சகல விஷயங்களும் சித்திபெறும். விசேஷ ஸ்பெஷல் ரக கண்ணுடி வாங்குபவர்களுக்கு, மேற்சொன்ன ஜால மோதிரத்தோடு "ஜால மூக்கண்ணுடி"யும் அனுப்பப்படும். ரீப்ளக்டோ பிரஞ்சு அழகிகளின் படங்களை இக் கண்ணுடி மூலம் பார்க்கும்போது ஆடை மறையும் ஆச்சரியத்தைக் காணலாம். கடிதங்களை ஆங்கிலத்தில் எழுத வேண்டும்.

The PUNJAB MESMERISM HOUSE (G.M.), Block No. 5. Jullunder City.

கேரளாவெங்கும் வெளிவருகிறது

1950, டிஸம்பர், 15-ந் தேதியன்று.

இதர இடங்களில் வெளிவரும் நாளை எதிர்பாருங்கள்

சேச்சி

மலையாளம்

நடிகை

தமிழ்

டைரக்ஷன்

T. ஜானகிராம்

STUDIO RATNA

கைலாஸ் பிக்சர்ஸ் புரொடக்ஷன்...

Chitrakala

ஸ்டாக் ஒழிப்பு விற்பனை

டி லக்ஸ் காமிராக்கள்



இந்த காமிராக்கள் அழகான தோற்றமும் நயமான வேலைப்பாடும் கூடியது. இந்தக் காமிராவினுல் இரண்டு பிரௌனி ஸைஸ் படங்களோ, நெ. 120 பில்மில் 8 சிறிய படங்களோ எடுக்கலாம். போட்டோக்கள் அழகாகவும் தத்ரூபமாகவும் இருக்கும். எடுப்பதும் மிக சுலபம்.

ஜப்பான் டைப் பாக்ஸ் காமிரா (பில்ம், கார்டுகள், ரஸாயன மருந்துகள் சுலபமாய் உபயோகிக்கும் முறை இவைகளுடன்) விலை ரூ. 8—8—0.

ஸ்பெஷல் ரகம் ரோல் பில்ம் காமிரா (அமெரிக்கன் மாடல்) — மிக்க சக்திவாய்ந்த பூதக் கண்ணுடி பொருத்தப்பட்டது. விலை ரூ. 18—8—0. தபால் செலவு ரூ. 1—8—0 கூடுதலாகும். திருப்தி இல்லையென்ருல் பணம் வாபீஸ்.

கொஞ்ச காமிராக்களே கைவசம் உள்ளன. ஆதலால் இன்றே ஆர்டர் செய்யுங்கள். கேட்லாக் இல்லை. கடிதங்களை ஆங்கிலத்தில் சுத்தமாய் எழுதவும்.

O. K. TRADERS, No. 5, (G. M.),
JULLUNDUR CITY.

ஒரு வரம் கோருக!

இனி நீங்கள் சிறிதும் ஏமாற்றமடைய வேண்டியதில்லை. பெரு முயற்சியால் தயாரிக்கப்பட்ட "வசீகரன் கைக்குட்டை" மூலம் நீங்கள் விரும்பிய பெண் கிடைக்கக்கூடும். சிரிப்பு தவழும் குழந்தைகள் உங்கள் மடியில் கொஞ்சலாம். கடின சித்தம் படைத்தவர்கள்கூட உங்கள் காலடியில் விழுவர். உங்களுடைய சக்திவாய்ந்த ஆதிக்கத்திற்கு கட்டுப்பட்டு நிற்பர். வேலை கிடைப்பது இனி கனவாக இருக்காது. மலடியாக இருக்கும் மங்கைக்குக்கூட குழந்தைகள் பிறக்கும். இறந்தவர்களின் ஆத்மாவுடன் தொடர்பு ஏற்படும். உங்களுடைய மூதாதையர்களின் புதையல்கள் எங்கிருக்கின்றனவென்பது உங்களுக்கு கனவில் அறிவிக்கப்படும். கோர்ட் தாவாக்களில் வெற்றி, லாட்டரியிலும், பேரம், லேவ்ஷ்யங்களிலும் வெற்றிமேல் வெற்றி. பரீட்சையில் சுலபமாக தேர்ச்சி பெறுவீர்கள். தொழிலில் லாபம் கிட்டும். உங்களுடைய துரதிஷ்டங்கள் நீங்கிவிடும். அதிர்ஷ்டம் உங்களுக்கு பாதசேவை செய்யும். சுருங்கக்கூறுமிடத்து உங்களுடைய விருப்பங்கள் அனைத்தும் பூர்த்தியாகிவிடும். உத்திரவாதம்: உங்கள் மனம் விரும்பியதை நீங்கள் அடையாவிடில் கைக்குட்டையை 6 மாதங்களுக்குள் திருப்பிக் கொடுத்துவிடலாம். வசீகரன் கைக்குட்டை நெ. 1, ரூ. 1-15-0. விசேஷ சக்தி வாய்ந்த கைக்குட்டை ரூ. 3-15-0. 24-மணி நேரத்திற்குள் இதன் மகிமையைக் காணலாம். நமது "வசீகரன்" கைக்குட்டையால் இக்கலியுகத்தில் இந்த ஸ்வாமி உண்மையை ஸ்தாபிக்கிருர். இதன் உதவியால் கணக்கற்றவர்கள் தங்களுடைய ஆசைகளைப் பூர்த்தி செய்து கொண்டுள்ளனர். இந்த அரிய தருணத்தை தயவுசெய்து இழக்காதீர்கள்.

SHREE MAHABIR SWAMY (G. M.) KARTARPUR, E. P.

நான் பிரஸிடெண்ட் வெஜிடேபிள் ஹேர் ஆயிலை உபயோகித்திருக்கிறேன். அது கேசத்திற்கும் ஆரோக்கியம் அளிக்கும் ஒரு சிறந்த கூந்தல் தைலம் என அனுபவத்தில் கண்டேன். நல்ல கூந்தல் வளர்ச்சிக்கு அது உதவுவதுடன் தேகத்திற்குக் குளுமையையும் அளிக்கிறது.''

PRESIDENT VEGETABLE HAIR OIL

RATHOD TRADING Co
SOWCARPET – MADRAS. I

Phone : 2881
இலங்கைக்கும், மலாயா நாட்டிற்கும் விற்பனை ஏஜண்டுகள் தேவை.

குண்டூசி

டிஸம்பர் 1950

இந்த ஊசியில்

நக்ஷத்திரம் பிறந்த நாள் —தலையங்கம்	7
கருப்பாயி நக்ஷத்திரமானுள்! —தமாஷ் படம்	9
நாரதர் மஹாதேவன் —வாழ்க்கை வர்ணனை ...	10
நாகர்கோயில் மஹாதேவன் —ஆர்ட் படம்	17
பி. பானுமதி —மூவர்ணப் படம் ...	18
வாழப் பிறந்தவள் (சிறுகதை) —ஆர். எஸ். மணி	19
நுனிப்புல் ...	23
குண்டூசியைக் கேளுங்கள் ...	27
செய்திப் படங்கள் ...	31
பொதுஜனம் பேசுகிறுர் ...	39
சிந்தனை வாழ்வு (சிறுகதை) —எம். எஸ். தணிகாசலம் ...	43
இது நிஜமா! ...	47
சுரையா, குமாரி —ஆர்ட் படங்கள்	51
நக்ஷத்திரம் பிறந்த நாள் ...	56
இது செய்தி ...	58
நடனம் ஆடினர் ...	62
பிரம்மலோகம் ...	66

வருஷ சந்தா :

இந்தியா, இலங்கை ... ... ரூ. 6
வெளிநாடுகள் ... ... ரூ. 9

தனிப் பிரதி :

இந்தியா 8 அணு. வெளிநாடு 12 அணு.
இலங்கை : 50 சதம்.

குறிப்பு:—"குண்டூசி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகள், விகடத்துணுக்குகள் முதலியவைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே. அவை யாரையும் குறிப்பிடுபவை அல்ல.

ஜுபிடரின்
1951ம்
வருஷத்தின்......
மிகச் சிறந்த
சித்திரம்...
மர்மயோகி
டைரக்ஷன் -
கே. ராம்நாத்
கதை வசனம் -
ஏ.எஸ்.ஏ.சாமி
ஸ்டுடியோ - சென்ட்ரல்

குண்டூசி

தென்னிந்தியாவிலேயே நிகரற்ற
விநியோகமுள்ள மாத சினிமாப் பத்திரிகை

பட்டை 4
ஊசி - 3
பிரதி 39

ஆசிரியர்-பி.ஆர்.எஸ்.கோபால்

நக்ஷத்திரம் பிறந்த நாள்

குண்டூசி தீபாவளி மலரில் "நக்ஷத்திரம் பிறந்த நாள்" பகுதியை நாம் வெளியிட்டபோது, இந்தப் பகுதியை வாசகர்கள் மிக வரவேற்பார்கள் என்ற எண்ணத்துடனேயே வெளியிட்டோம். அதுபோலவே நேயர்கள் இப்பகுதியை மிக ரஸிப்பதோடு, இதன் மூலம் வேறொரு எதிர்பாராத நல்ல பலனும் ஏற்பட்டிருக்கிறது. எதிர்பார்த்த பலனுடன்கூட எதிர்பாராத பலனும் ஏற்பட்டிருப்பதனால் எமக்கு அதிக சந்தோஷம் ஏற்படுகிறது.

சென்ற தீபாவளிக்குப்பின் சில தினங்களுக்கெல்லாம் நம் ஆசிரியருக்கு சென்னை சினிமா ரஸிகர்கள் சங்கத்தின் கூட்டுக் காரியதரிசியிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அந்தக் கடிதந்தான் மேற்சொன்ன எதிர்பாராத பலனை அறிவித்தது:

"உங்கள் தீபாவளி மலர் மிக அழகாய் அமைந்திருக்கிறது......ஆர்ட் படங்கள் நேர்த்தியாயுள்ளன படிப்பதற்கும் சுவாரஸ்யமான விஷயங்கள் உள்ளன......முக்கியமாக எங்கள் மனதை 'இது நிஜமா!' 'நக்ஷத்திரம் பிறந்த நாள்' ஆகிய இரு புது அம்சங்களும் மிகக் கவருகின்றன. அதிலும் 'நக்ஷத்திரம் பிறந்தநாள்' பகுதியைப் பார்த்ததும் எங்களுக்கு ஒரு புது எண்ணம் தோன்றியிருக்கிறது. ஒவ்வொரு மாதமும் அந்த மாதத்தில் பிறந்த நக்ஷத்திரங்களை வரவழைத்து, அவர்களை கௌரவிப்பதற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று எங்கள் சங்கம் தீர்மானித்திருக்கிறது......"

இரண்டு வருஷங்களுக்குமுன் ஸ்தாபிக்கப்பட்ட சினிமா ரஸிகர்கள் சங்கம் படிப்பும், ஊக்கமும், நம் சினிமாக் கலையை நல்ல நிலைமைக்குக் கொண்டு வரவேண்டுமென்ற ஆர்வமும் உள்ள சுறுசுறுப்பு மிக்க சில வாலிபர்களின் மனப்பூர்வமான முயற்சியின் விளைவாகும். ஒரு சங்கத்தை ஆரம்பிப்பது சுலபம்; ஆனால் அதை சகலரும் அறியச் செய்து நிலைநாட்டுவதோ மிகக் கஷ்டமான காரியமாகும். ஆரம்பத்தில் எவ்வளவோ எதிர்ப்புகளும், இடையூறுகளும் ஏற்படுவது சகஜமே. இது மாதிரியான 'பாலாரிஷ்ட' நோய்களையெல்லாம் ஏமாற்றிவிட்டு இச்சங்கம் அழகாக தவழ்ந்து விளையாடத் தொடங்கியிருக்கிறது மகிழ்ச்சிக்குரிய விஷயமல்லவா?

இச்சங்கத்தின் வளர்ச்சியைப் பற்றிக் கூறுகையில், அதன் கூட்டுக் காரியதரிசி ஏ. கே. லாலைப்பற்றியும் கட்டாயம் குறிப்பிடவேண்டும். தேனிபோன்ற சுறுசுறுப்பும், அசைக்கமுடியாத முற்போக்கு எண்ணங்களும், எடுத்துக்கொள்ளும் காரியத்தை வெற்றிகரமாய் முடிப்பதற்கான பிடிவாத குணமும் உடையவர் அவர். சமீப காலமாக இச்சங்கம் பொதுஜனங்களின் கவனத்தை அதிகமாய் கவர்ந்து வருவதற்கு அவருடைய சலியாத உழைப்புதான் முக்கிய காரணமாகும்.

ரோஜாவுக்கு உபசாரம்

ஸ்ரீ. லால் நமக்குக் கடிதம் எழுதியதோடு தம் எண்ணத்தை விட்டுவிடவில்லை; செயலிலும் காட்டிவிட்டார். சினிமா ரஸிகர்கள சங்கத்தினரின் சார்பாக, (நவம்பர் மாதம் பிறந்த நக்ஷத்திரமான) பி. எஸ். சரோஜாவுக்கு ஒரு உபசார விருந்தை நடத்துவதென்றும், நடிகர் ரஞ்சன் மேனுடு செல்வதை முன்னிட்டு அவரையும் இந்த விருந்தன்போதே கெளரவிப்பது என்றும் தீர்மானித்தனர். அதற்கிணங்கஇம்மாதம் 3ந் தேதியன்று சென்னை "வுட்லாண்ட்ஸ்" ஹோட்டலில் ஒரு சிற்றுண்டி விருந்து கச்சிதமாக நடத்தப்பட்டது. முக்கியமாக பத்திரிகாசிரியர்களும், சங்கத்தின் அங்கத்தினர்களும் இவ்விருந்திற்கு விஜயம் செய்தருந்தனர். சங்கத்தின் உபதலைவரான ஸ்ரீ. ஏ. அருணாசலம் தலைமை வகித்தார். சென்னை சர்க்காரின் மராமத்து இலாகா காரியதரிசியான ஸ்ரீ. லோபோ பிரபு பிரதம விருந்தினராக விளங்கினார்.

நக்ஷத்திரம் பேசியது !

விருந்திற்குப் பிறகு பி. எஸ். சரோஜா தாம் முன்னதாகவே தயார்த்து வந்திருந்த அழகிய சிறு பிரசங்கத்தை—பேசும் தோரணையில்—உணர்ச்சியுடன் படித்தார். தம் 22வது பிறந்த தினத்தைக் கொண்டாடித் தம்மைக் கௌரவிக்க முன்வந்ததற்காக சரோஜா சங்கத்தினரை மிகப் பாராட்டிவிட்டு பின் வருமாறு கூறினார் :

"சினிமாத் தொழில் ஒரு மட்ட ரகமான தொழில் என்றும், அதில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மானமே இல்லையென்றும் துவேஷப் பிரசாரம் வலுவடைந்து வரும இக்காலத்தில் இச்சங்கத்தினர் என் போன்ற நடிகைகளை கௌரவிக்க முன்வந்ததுஅவர்களது தைரியத்தையும், முற்போக்கு எண்ணத்தையும் காட்டுகிறது. இதன்மூலம் இவர்கள் சினிமாத் தொழிலுக்கே தனி கௌரவத்தை அளிக்கிறார்கள். சினிமாத் தொழல் சீர்கெட்டிருப்பதற்கு அதில் ஈடுபட்டிருப்பவர்கள் தாம் பொறுப்பாளிகள் என்பதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. எங்களைத் திண்டாதவர்களாக மதித்து, சரிசம அந்தஸ்தை அளிக்காத சமூகமும் இப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். சமூகம் நடிக, நடிகைகளுக்கு சம அந்தஸ்தை அளிக்க முற்பட்டால் தான் சினிமாக் கலை உன்னத நிலையை அடையமுடியும்."

சினிமாவின் லக்ஷியம் ?

பின்னர், ஸ்ரீ. லோபோ பிரபு கச்சிதமாக சில வார்த்தைகள் பேசினார். படங்கள் மக்களுக்கு—முக்கியமாக கிராமவாசிகளுக்கு—அறிவு வளர்ச்சியை உண்டுபண்ணும் வகையிலேயே தயாரிக்கப்படவேணடும் என்றும், அவைகளில் சமூகப் பிரச்னைகளே அடிப்படையாய் இருக்கவேண்டும் என்றும் கூறினார். சங்கத்தின் உபதலைவர் ஸ்ரீ. ஏ. அருணாசலம் சரோஜாவின் நடிப்புத் திறமையைப் பாராட்டினார். சங்கத்தின் பொதுக்காரியதரிசியான ஸ்ரீ. ஈ. பி. சாம்யூல் வந்தனோபசாரம் கூறினார்.

ரஞ்சன் வரவில்லை !

நடிகர் ரஞ்சனையும் கௌரவிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த உபசார விருந்திற்கு ரஞ்சன் வரவில்லை! ஒரு பொதுக்கூட்டத்திற்கு வருவதாக வாக்களித்துவிட்டு வராமலிருப்பது ஒரு மாபெரும் குற்றமாகும். கூட்டத்திற்கு வந்த அத்தனை பேரையும் இது அவமரியாதை செய்ததாகும். படித்துப் பட்டம் பெற்றவரான—ஆராய்ச்சி ஞானம் நிரம்ப உடைய—ரஞ்சன் இக்குற்றத்தைச் செய்தது அதிகம் கண்டிக்கத் தக்கது.

நம் நக்ஷத்திரங்களின் போக்கும் நடத்தையுமே தனி ரகம். வேலை நேரம் போக பாக்கி வேளைகளில் சதா வீட்டில் அடைத்துக் கிடப்பதையே அவர்கள் தனிக் கலையாய் வளர்த்து வருகிறார்கள். யாராவது கேட்டால் மட்டும் 'தங்களுக்கு அவகாசமேயில்லை' என்று ஜம்பப பேசிக் கொள்ளுவார்கள். ஏதாவது ஒரு பொதுக் கூட்டம், வைபவம், இவைகளுக்கு இவர்களை அழைத்துவர வேண்டுமானால் பகிரத முயற்சிகள் செய்தாக வேண்டும். சினிமா ரஸிகர்கள் சங்க நிர்வாகிகளுக்கும் இவ் வித சங்கடங்கள் ஏற்படவே செய்தன வாம். நம் நக்ஷத்திரங்கள் நீடித்த நாள் புகழுடன் விளங்குவதற்கு தாங்களும் முயற்சிப்பதில்லை; பிறர் செய்யும் முயற்சிகளுக்கும் இணங்குவதில்லை. பொதுஜனங்களுடன் சாதாரண தொடர்பையாவது ஏற்படுத்திக் கொள்ளாத வரையில், தாங்கள் நீடித்த நாள் பிரகாசிக்க முடியாது என்பதை அவர்கள் இனியாவது உணரவேண்டும்.

20 வயது கருப்பாயிக்கு....
சினிமாவில் நடிக்க சான்ஸ் கிடைக்கவில்லை!
NO!
இல்லே!!
கிடையாது!..
NO VACANT!!!..
30 வயதில் கமலா ஆனதும்...
எக்ஸ்ட்ராவாக நடித்தாள்!
40 வயது கிழவி ஆனால் என்ன!
'கமலினி' என்ற பெயரில்...
சினிமா வானில் பிரபல நட்சத்திரமாய் ஜொலிக்கிறாள்!!!

நாரதர் மஹாதே

சுமார் 20 வருஷங்களுக்கு முன் ஸ்பெஷல் நாடகங்களுக்கு பிரமாதமான "மௌஸ்" இருந்த காலத்தில் நாகர்கோயிலில் (தற்போது என். எஸ். கே. யின் 'அசோகா டாக்கீஸா'க விளங்கும்) "சரஸ்வதி விலாஸ்" என்ற பெயர் வழங்கி வந்த நாடகக் கொட்டகையில் பிரபல எஸ். ஆர். ஜானகி அம்மாளின் வள்ளித் திருமணம் நாடகம் நடந்தது. பெயர் வாங்கிய பெரிய நடிகர்களிடையே—பெயர் தெரியாத ஒரு புதிய பையன் நாரதர் வேஷத்தில் தோன்றி நடித்தான். பையன் புதியவனாய் இருந்தும்—அவனுக்கு அதுவே முதல் நாடகமாயிருந்தும்—அபாரமாகப் பாடி நடித்தான். சபையோருக்கு ஏற்பட்ட ஆனந்தம் அளவிடத் தக்கதாயில்லை. பிரதம வேஷத்தில் தோன்றிய ஜானகியம்மாளும் பையனின் நடிப்பை வெகுவாகப் பாராட்டி அவன் கழுத்தில் ஒரு பெரிய ரோஜா மாலையைப் போட்டார். அன்று அவர் போட்ட அந்தப் பூமாலை இன்றைய தினம் அப் பையனுக்குப் புகழ் மாலையாக மாறியிருக்கிறது. அன்று நாடகத்தை ரஸித்தவர்களைப் போலவே அநேக ஆயிரம் மடங்கு பேர்கள் இன்று சினிமா மூலம் நாகர்கோயில் கே. மஹாதேவனின் சங்கீதத்தையும், நடிப்பையும் ரஸித்து வருகிறார்கள். ஆனால் இன்றைய உன்னதப் பதவியை மஹாதேவன் சுலபமாக அடைந்துவிடவில்லை. ஆரம்பத்தில் அவர் எவ்வளவோ ஏமாற்றங்களையும், கஷ்டங்களையும் அனுபவித்துச் சமாளித்துக் கொள்ள வேண்டியிருந்தது.

திருவாங்கூரில் மிகப் பிரபலமான ஒரு பிராமண குடும்பத்தில் பிறந்தவர் நாகர்கோயில் மஹாதேவன். அந்தக் காலத்தில் "ஆண்டி ஐயர்" என்று சொன்னால் அந்தப் பக்கங்களில் தெரியாதவர்களே இருக்க மாட்டார்கள். இந்த ஐயர் பெயரில் மட்டும்தான் 'ஆண்டியாய்' இருந்தாரே தவிர சந்தான பாக்கியத்திலோ, சொத்து விஷயத்திலோ ஒரு அரசர் போலவே இருந்தார். அவருக்கு எட்டு ஆண்களும், ஏழு பெண்களும் பிறந்தனர். அவருடைய ஆறாவது பெண்ணின் புத்திரர்தான் நம் மஹாதேவன்.

மஹாதேவனின் தகப்பனார் நாகர்கோயிலில் ஜில்லாக் கோர்ட்டில் பெஞ்சு கிளார்க்காக இருந்தார். நல்ல சம்பாத்யமாம். ஆகவே செழிப்பும், செல்வமும், சூழ்ந்த நிலையில் மஹாதேவன் வளர்ந்து வந்தார். அதோடுகூட தகப்பனாருக்கு ரொம்பவும் செல்லப் பிள்ளையாம் மஹாதேவன். அவருக்கு இரண்டு தமையன்மார்களும், இரண்டு தம்பிகளும்—ஆக நான்கு சகோதரர்கள் உண்டு. இவர்களில் மூத்த தமையன் சில வருஷங்களுக்கு முன்பு தவறி விட்டார். பிரபல கதாசிரியை கோமதி ஸ்வாமிநாதனும், எழுத்தாளர் கே. பத்மநாபனும் மஹாதேவனுடன் கூடப் பிறந்தவர்களே.

வன்

இண்டேசி

மஹாதேவனது வீட்டில் ஒரு பழங்கால கிராமபோன் பெட்டி இருந்தது. அதற்குத் துணையாக, "பரமசிவன் என்ன வரம் வேணுமுன்னு கேட்டாராம்" போன்ற ஆதிகாலப் பழைய பிளேட்டுகள் பலவும் இருந்தனவாம். இந்தக் கிராமபோன் பெட்டியைப் பற்றி பிரமாதமாக ஒன்றும் சொல்லுவதற்கில்லை. ஆனால் பிரமாதமாய் சொல்லக்கூடியபடி அது மஹாதேவனின் வாழ்க்கைக்கு அஸ்திவாரம் போட்டு வைத்தது.

அழகாக வாரிப் பின்னிவிடப்பட்ட ஜடை அழகுடனும், கையில் புஸ்தகங்களுடனும் மஹாதேவன் பள்ளிக்குப் புறப்படுவார். வழியில் ஏதாவது கிராமபோன் பாடுவது கேட்டு விட்டாலோ, அவருடைய கால்கள் அவரையும் அறியாமலே அங்கு இழுத்துச் சென்றுவிடும். பிறகு பள்ளிக்கூடத்தை அடியோடு மறந்தே விடுவார். அக்கம் பக்கத்து ஊர்களில் எங்காவது கச்சேரி நடப்பதாகக் கேள்விப் பட்டாலோ வீட்டில் சொல்லிக் கொள்ளாமலே புறப்பட்டு விடுவார்.

மஹாதேவனின் போக்கை அவருடைய தகப்பனார் நன்குணர்ந்தார். படிப்பை நிறுத்திவிட்டு, சுந்தரக் கம்பர் என்றவரிடம் மஹாதேவனுக்கு சங்கீத சிக்ஷைக்கு ஏற்பாடு செய்தார். ஆரம்ப பாடங்களை மஹாதேவன் சிரத்தையுடன் மளமளவென்று கற்றுக்கொள்ளலானார். அவருக்கு அற்புதமான சாரீரம் இருந்ததையும் சங்கீதத்தில் மிகுந்த உத்ஸாகம் காட்டியதையும் பார்த்தவர்கள் அவர் விரைவில் ஒரு பிரபல சங்கீத வித்வானாகி விடுவார் என்று கூறினார்கள்.

இந்த சமயத்தில்தான் மஹாதேவன், ஆரம்பத்தில் குறிப்பிட்ட "வள்ளித் திருமணம்" நாடகத்தில் எஸ். ஆர். ஜானகியுடன் நடித்தார். அந்த நாடகத்தில் அவர் நன்கு நடித்த விஷயம் எங்கும் பரவியது. பல இடங்களிலிருந்து நாடகங்களில் நடிப்பதற்கான அழைப்புகள் வந்தன. பல நாடகங்களில் அவர் நடிக்கவும் நடித்தார்.

இப்படியிருந்த சமயத்தில் மஹாதேவனுக்கு மஞ்சள் காமாலையும், வயிற்றில் ஒரு அபாயகரமான கட்டியும் ஏற்பட்டன. அச்சமயம் அவர்களுடைய குடும்பம் மிக ஏழ்மையான நிலையை அடைந்திருந்தது. வாழ்க்கை நடத்துவதே

முடியாமல் இருந்த போதிலும் வீட்டில் உள்ள பொருள்கள் பலவற்றை விற்று மஹாதேவனுக்கு வைத்தியம் பார்த்து வந்தனர் அவருடைய பெற்றோர்கள். கடைசியில், எமனுடன் நடந்த இப் போராட்டத்தில் மஹாதேவன் வெற்றி பெற்று, புனர்ஜென்மம் பெற்றார்.

உடம்பு குணமானதும் அவரது மனம் மீண்டும் நாடகத்தையே நாடியது. எனவே அவர் டி.கே.எஸ். சகோதரர்களின் நாடகக் கம்பெனியில் சேர்க்கப்பட்டார். ஆனால் கொஞ்ச நாட்களுக்குப் பிறகு அவர்களிடம் ஏனோ சொல்லிக் கொள்ளாமலே வீடு திரும்பி விட்டார். மீண்டும் சங்கீதத்தின்மீது அவருக்கு ஆசை ஏற்படவே கொஞ்ச காலம் வடிவீஸ்வரன் வேலுப் பிள்ளையிடமும், பிறகு திருக்குறுங்குடி கிருஷ்ணய்யங்காரிடமும் சங்கீத சிக்ஷை சொல்லிக் கொண்டார். சங்கீதப் பயிற்சி ஒழுங்காக நடந்து கொண்டிருந்த சமயத்தில் சில நண்பர்கள் கூறிய யோசனை அதற்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டது! "அண்ணாமலை நகரிலுள்ள கலாசாலையில் சேர்ந்து பயின்றால் நல்ல சங்கீத ஞானம் ஏற்படும்" என்று அவர்கள் கூறினார்கள்.


சக்ரதாரி

அதன் பேரில் மஹாதேவன் அண்ணாமலைநகரை அடைந்தார். ஆனால் போன வேகத்திலேயே (இரண்டு மாதத்திற்குள்) வீடு திரும்பிவிட்டார் மஹாதேவன்!

மூன்றும் தடவையாக, தரித்திரமும், கஷ்டங்களும் நிறைந்த சூழ் நிலையில் மஹாதேவன் பிடிவாதமான மனத்துடன் சங்கீத சிக்ஷையைத் தொடங்கினார். சில வருஷ சிக்ஷைக்குப் பிறகு அவர் கச்சேரியில் பாடக்கூடிய திறமையையும் அடைந்துவிட்டார். நாகர் கோயிலில் நடந்த கலியாணங்களிலும், ஸ்ரீ ராமநவமி விழாக்களிலும் அவர் பாட ஆரம்பித்தார். "பாகவதர்" என்ற பட்டமும் அவருக்கு ஏற்பட்டது. வெறும் பாட்டு மட்டும் போதாது; என்ற எண்ணத்துடன் அவர் ஹரிகதா காலக்ஷேபங்கள் செய்யவும் கற்றுக் கொண்டார்.

அந்தக் காலத்திலேயே மஹாதேவனும் அவரது குடும்பத்தாரும் ஜாதி, மத, அரசியல் விஷயங்களில் பரந்த நோக்கங் கொண்டவர்களாய் இருந்தனர். தீண்டாமைப் பிரசாரம் தீவிரமாக நடந்து வந்ததன் காரணமாக, மஹாதேவன் தாமும் "தீண்டாமை ஒழிப்பு" தினத்தைக் கொண்டாடத் தீர்மானித்தார். நவராத்திரி ஒன்பதாவது நாளன்று தம் வீட்டில் "தீண்டாமை ஒழிப்பு தினம்" கொண்டாடப்படும் என்றும், தாமே 'வள்ளி திருமணம்' கதா காலக்ஷேபம் செய்யப் போவதாகவும், முடிவில் ஜாதி, மத, பேதமின்றி (!) யாவருக்கும் சுண்டல், பஞ்சாமிருதம், தாம்பூலம் முதலியவை வழங்கப்படுமென்றும் அச்சடித்த ஏராளமான நோட்டீஸ்கள் மூலம் விளம்பரப்படுத்தினார். கதா காலக்ஷேபத்திற்கு பிரம்மாண்டமான கூட்டம் சேர்ந்து விட்டது! கதை முடிவில், அவ்வூர் பிரபல காங்கிரஸ் தலைவராயிருந்த ஸ்ரீ. பொ. திருகூட சுந்தரம் பிள்ளை மஹாதேவனின் தைரியத்தையும், கதை சொன்ன அழகையும் மெச்சி, அவரை ஆசீர்வதித்தார்.

இப்படியாக நான்கு வருஷ காலம் மஹாதேவன் சொந்த ஊரிலேயே வசித்து வந்தார். ஓயாமல் வடுவூராரின் நாவல்களையும் பத்திரிகைகளையும் படித்து

வந்ததன் விளைவாக, கதை எழுதும் "பைத்தியம்" அவருக்கு ஏற்பட்டது. ஆரம்பத்தில் அபஜெயமே ஏற்பட்டாலும், பிறகு, "ஆனந்த விகடன்" தீபாவளி மலரிலேயே ஒரு கதை வெளிவந்துவிட்டதும் அவருக்கு உத்ஸாகம் ஏற்பட்டுவிட்டது. அது முதல் அவர் இன்றுவரையில் இடைவிடாது பத்திரிகைகளுக்கு விஷயதானம் செய்துவருகிறார். நம் "குண்டூசி"யிலும் அவருடைய கதைகள் பல வெளிவந்திருக்கின்றன. அவருடைய கட்டுரை கதைகளில் முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயம், அவைகளில் ததும்பி நிற்கும் ஹாஸ்யச் சுவையாகும்.

ரத்னகுமார்

சங்கீதம், நாடகம், கதா காலக்ஷேபம் ஆகிய துறைகளில் மஹாதேவன் தம் போராட்டங்களை முடித்துக் கொண்டு சினிமா உலகின்மீது படையெடுக்க ஆரம்பித்தார். அவரை அழைத்துக்கொண்டு சென்னைக்கும், சேலத்திற்குமாக அவருடைய தந்தை எவ்வளவோ தடவை பிரயாணம் செய்திருக்கிறார். ரயில்காரனும், தபால்காரனும், போட்டோக்காரனும் ஏராளமான பணத்தை விழுங்கியதுதான் பலன். அவர் சினிமாவில் சேருவதற்காகச் செய்த முயற்சிகளை யெல்லாம் எழுதினால் அதுவே ஒரு ஹாஸ்யக் கட்டுரையாக விளங்குமாம். ஆனால் அவருடைய அனுபவங்களென்னவோ அவருக்கு மனத்துயரையே அளித்து, சினிமாவில் சேருவதற்கான நம்பிக்கையைச் சிதர அடித்தன. உதாரணமாக இப்பொழுது வெகு சுகமாகப் பாடிவரும் இதே மஹாதேவனுக்கு ஒரு காலத்தில் "மைக்கிற்கு ஏற்ற சாரீரம் இல்லை" என்று ஒரு "பிரஹஸ்பதி" தீர்ப்பளித்தாரென்றால் அவரது மனம் என்ன பாடு பட்டிருக்கும்!?


பாரிஜாதம்

ஆனால் தோல்விகள் ஏற்பட ஏற்பட, "சினிமாவில் சேர்ந்தே தீருவது" என்ற அவரது வைராக்கியம் வலுத்தது. கடைசியில் அந்த நாளும் வரவே செய்தது. துயரம் மிகுந்த மூன்று வருஷ சென்னை வாழ்க்கைக்குப் பிறகு 1937-ம் வருஷத்தில் ஒரு நாள் அவர் 'நடிகர்கள் தேவை' விளம்பர மொன்



லாவண்யா பிக்சர்ஸார் சமீபத்தில் வெளியிட்டுள்ள "பாரிஜாதம்" படத்தில் நாகர்கோயில் மஹாதேவன், மஹாலிங்கம், ராஜம்மா தோன்றும் ஒரு காட்சி.

றைப் பார்த்துவிட்டு சுந்தரம் ஸ்டுடியோவுக்குச் சென்றார். **விப்ர நாராயணா** படத்திற்காக அவர்கள் நடிகர்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தனர். சுமார் இரு நூறு பேர்கள் வந்திருந்தனர். மஹாதேவன் உள்பட அனைவரும் பரீக்ஷிக்கப்பட்டனர். கடைசியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாக்கியம் நம் மஹாதேவனுக்கே கிட்டியது.

விப்ர நாராயணா கதையையே வேறொரு பட முதலாளியும் படமெடுத்ததன் காரணமாக, சுந்தரம் ஸ்டுடியோக்காரர்கள் தங்கள் திட்டத்தை மாற்றிக் கொண்டு **பூகைலாஸ்** படத்தைத் தயாரிக்க முற்பட்டார்கள். அதில் மஹாதேவனுக்கு நாரதர் வேஷம் அளிக்கப்பட்டது. அவருடைய குணத்திற்கேற்ற இப்பாத்திரம் ஹாஸ்யச் சுவையுடன் கூடியதாய் அமைந்ததாலும், அப்படத்தின் டைரெக்டர் சுந்தர் ராவ் நட்கர்னி எடுத்துக்கொண்ட பெருமுயற்சியாலும் அவருடைய நடிப்பு நன்கு சோபித்தது. பாட்டும் இனிமையாய் இருந்தது. முதல்படத்தின் மூலமே பிரகாசிக்க ஆரம்பித்துவிட்டார் மஹாதேவன்.

எல்லோரும் தெரிந்து கொள்ளக்கூடியபடி மஹாதேவன் **பூகைலாஸில்** நடித்திருக்கிறார் என்றாலும், ஒருவருமே தெரிந்துகொள்ள முடியாதபடி நடித்திருக்கும் **லீலாவதி சுலோசனா**தான் அவருடைய முதல் படமாகும். இந்தப் படத்தில் 'பக்கடா' மீசையும், அல்பாகா கௌனும் கொண்ட ஆசாமியொருவர் படம் ஆரம்பமானவுடனேயே, "அமைச்சரே" என்ற பாட்டுடன் வருகிறார் பாருங்கள்; அது சாக்ஷாத் மஹாதேவன்தான்!

பூகைலாஸ் முடிந்ததும் மஹாதேவனுக்கு நாரதர் வேஷம் நிலைத்துவிட்டது. அந்த வேஷம் மற்றெல்லோரையும்விட மஹாதேவனுக்கே கச்சிதமாய் பொருந்துகிறது என்ற ஏகோபித்த அபிப்பிராயம் ஏற்பட்டது. அதன் காரணமாக, அவர் **பிரஹலாதா**விலும் **சதிமுரளி**யிலும் நாரதர் வேஷங்களிலேயே தோன்றி நடித்தார்.

இப்படங்கள் முடிந்ததும் **அசோக்குமார், கங்காவதார், கிருஷ்ண குமார், பிரபாவதி, என் மனைவி** ஆகிய படங்களில் ஏக காலத்தில் அவர் நடிக்கத் தொடங்கினார். இப்படங்களுள் **கிருஷ்ண குமார், பிரபாவதி** ஆகிய படங்களிலும் அவருக்கு நாரதர் வேஷமே கொடுக்கப்பட்டது. **அசோக் குமாரில்** மழமழ வென்ற தலையுடன் பௌத்த

பிக்ஷுவாக நன்கு நடித்திருக்கிறார். [illegible] மனைவியிலும் கங்காவதாரிலும் அவருக்கு வேஷப் பொருத்தம் சரியாய் அமையவில்லை.

மேற்சொன்ன படங்களுக்குப் பிறகு மஹாதேவன் சாலிவாஹனன், ஸ்ரீ வள்ளி, [ஆ] வல்லி, கிருஷ்ண துலாபாரம் ஆகிய படங்களில் நடித்திருக்கிறார். ஸ்ரீ வள்ளியில் அவர் கானாம்ருதமாய் பாடி நடித்திருக்கிறார். அதன் விளைவாக அவருக்கிருந்த "மௌஸ்" பன்மடங்காகி விட்டது. பிறகு அவர் காமவல்லி, ஏகம்பவாணன், சக்ரதாரி, ரத்னகுமார் ஆகிய படங்களில் நடித்தார். சமீபத்தில் வெளிவந்துள்ள பாரிஜாதம் படத்திலும் மஹாதேவன்தான் நாரதர்!

மஹாதேவனுக்கு ஹிந்தி படங்களைப் பார்ப்பதில் ரொம்பவும் இஷ்டம். அதுவும் பிரபல ஷோரப் மோடியோ, சந்திரமோஹனோ, நடித்த படங்களென்றால் அவைகளை முதலில் பார்த்த பின்னர்தான் அவர் வேறு வேலையைக் கவனிப்பார். அவர்களைப் போலவே தாமும் உணர்ச்சியுடன் நடிக்கவேண்டுமென்ற ஆசை அவருக்கு. இந்த ஆசை அவருக்கு அநேகமாக நிறைவேறியிருக்கிறது என்றே நான் கருதுகிறேன். நாரதர் வேஷத்தோடு நின்று விடாமல் அவர் சில படங்களில் கதாநாயகன் போன்ற இதர வேஷங்களிலும் நடித்து வெற்றி பெற்றிருக்கிறார்.

மஹாதேவன் இனிமையும், கம்பீரமும் கூடிய சாரீரத்தைப் பெற்றிருக்கிறார். அவர் அடிக்கடி மேடையிலும், ரேடியோவிலும் சங்கீத கச்சேரிகளைச் செய்துவருகிறார். அவருக்கு கர்நாடக சங்கீதத்தையும் ஹிந்துஸ்தானி சங்கீதத்தையும் அருமையாக பாடும் திறமை உண்டு. பூகைலாஸில் அவர் பாடிய ஹிந்துஸ்தானி மெட்டுப் பாட்டுகள் மிகப் பிரபலம் அடைந்ததே இதற்கு அத்தாட்சியாகும்.

சுமார் ஐந்தரை அடி உயரமும், சிவந்த மேனியும், சாந்தம் தவழும் முகமும் உடைய மஹாதேவனுக்கு இப்பொழுது 38 வயதாகிறது. அவர் 1913ம் வருஷம் நவம்பர் மாதம் 15ந் தேதியன்று பிறந்தவர்.

1934-ம் வருஷத்தில் (லலிதாவுடன்) அவருக்கு விவாஹம் ஆகியது. அவருக்கு மோஹன், முரளி என்ற இரண்டு ஆண் குழந்தைகளும், புவனா என்ற ஒரு பெண் குழந்தையும் பிறந்துள்ளனர். ஆடம்பரமற்ற வாழ்க்கை நடத்துவதையே அவர் விரும்புகிறார்.

ஆரம்ப காலத்தில் பல கஷ்டங்களுக்குப் பிறகு வெற்றிபெற்ற நடிகராதலால் அவர் அடக்கமான குணமும், தம் வேலையைத் திருந்தச் செய்யவேண்டும் என்ற எண்ணமும் கொண்டிருக்கிறார். அவரைப் பற்றி எந்தப் படமுதலாளியும் புகார் செய்து நான் கேட்டதில்லை.

மஹாதேவன் இதுவரையில் 18 படங்களில் நடித்துப் பிரக்யாதி பெற்றிருக்கிறார்; பொது ஜனங்களும் அவரது நடிப்பையும் பாட்டையும் விரும்புகிறார்கள் என்றாலும், நல்ல பாட்டு, நடிப்பு, தோற்றம் இவை பொருந்திய அவரை சினிமா உலகம் பூரணமாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. இனியாவது அந்த நாள் வருமா என்று பார்ப்போம்.


மஹாதேவனின் மனைவி லலிதாவும், அவரது புத்திரர்கள்—மோஹனும், முரளியும்.

ஸ்தாபிதம் 1920

தந்தி: நஸ்யம்
மதருஸ்

உலகமெங்கும் புகழ் பெற்றது. பல எக்ஸிபிஷன்களில் மெடல்கள் பரிசு பெற்றது.

P. V. RAJAN'S SUPERIOR MADRAS SNUFF

நெ. 1 எக்ஸ்ட்ரு ஸ்பெஷல் பட்டணம் பொடி ஒரு தோலா டின்களிலும் கிடைக்கும்.

பி. வி. ராஜன் & கம்பெனி

உயர்ந்த பட்டணம் பொடி
& *R. S.* சுகந்த மூக்குத்தூள் பாக்டரி
அரக்கோணம் & மதருஸ்.

(மற்ற பொடி தினுசுகளுக்கும், விவரங்களுக்கும் எழுதவும்.)

பரிசு ரூ. 1000
(ஒரு நூதன கண்டு பிடிப்பு)

மாய மோதிரம்

இந்த மோதிரம் அபூர்வ மந்திர சக்தியுடன் தயாரிக்கப்பட்டது. இது ஆச்சரியகரமான வேலைகளைச் செய்கிறது. எவரேனும் இம்மோதிரத்தை அணிந்து கொண்டால் எவ்வளவு கஷ்டமான காரியமாக யிருந்தாலும் அல்லது தடுக்க முடியாத விபத்தாக யிருந்தாலும் வெற்றி பெறுவர். இது உங்களை எல்லாவித ஆபத்துகளினின்றும் வியாதிகளிலிருந்தும் காப்பாற்றும் துர்க்கிரஹங்களின் தொந்தரவு நீங்கும். இம்மோதிரத்தை அணிபவர் தன் காதலரை (அவளானாலும் அவனானாலும் சரி) சுலபமாக வசப்படுத்தலாம். அவளானாலும் அவனானாலும் உங்களுக்குகட்டுப்படுவார். நீங்கள் காதல், உத்தியோகத்தில் வெற்றி பெற்று ஏராளமான சம்பத்தையும் அடைவீர்கள். இம்மோதிரம் உங்களுக்கு ஒரு மெய்க்காப்பாளனாக உதவும் இதை ஒரு முறை பரீட்சித்து இதன் ஆச்சரியகரமான பலன்களை முதல் இரவே காணுங்கள் விலை ரூ. 1—15—0. ஸ்பெஷல் ரூ 3—0—0. மிக சக்திவாய்ந்தது ரூ 5—15—0. போஸ்டேஜ் தனி. பலனளிக்காவிடில் விலை திருப்பியளிக்கப்படும்.

Principal:
SHINING MESMERISM HOUSE (G. M.)
KARTARPUR (E. P.)

வாழப் பிறந்தவள்!

ஆர். எஸ். மணி

அன்புள்ள வனஜா:

உன் கடிதம் கிடைத்தது. உடனே பதில் எழுதவில்லையே என்ற கோபம் வேண்டாம். எனக்கு அவகாசம் இல்லை என்றோ, அவசரமான வேலை இருந்தது என்றோ நான் சொல்லத் தயாராக இல்லை. ஆற அமர யோசித்து பதில் எழுத வேண்டியிருந்ததே காரணம்.

உனக்கு நடனக் கலையில் அளவற்ற பயிற்சி ஏற்பட்டிருக்கிறது. கடவுள் உனக்கு நல்ல சாரீரத்தைக் கொடுத்திருக்கிறார். சரஸ்வதி தேவியின் பூரண கடாக்ஷமும் உன்னிடம் நிரம்பியிருக்கிறது. உன்னைப் பெற்றோர்கள் கல்யாணம் செய்து கொள்ளும்படி தூண்டுகிறார்கள். ஆனால் நீயோ சினிமாவில் சேர்ந்து அக் கலைக்கு ஒப்பற்ற சேவை செய்ய வேண்டுமென்று ஆசைப்படுகிறாய். இந்த விஷயத்தில் என் புத்திமதியைக் கேட்டிருக்கிறாய். நான் என்ன சொன்னாலும் அதன்படி நடப்பதாயும் எழுதி இருக்கிறாய். உன் பிற்கால வாழ்வை என் தீர்ப்பில் ஒப்படைத்து விட்டாய். நான் அதற்காக மிகவும் சந்தோஷப்படுகிறேன். ஏனென்றால் ஒரு காரியத்தைச் செய்த பிறகு யோசிப்பதை விட செய்வதற்கு முன்பே யோசிப்பதுதான் புத்திசாலித்தனமாகும்!

நாம் பிரிந்து இன்று பல வருஷங்கள் ஆகிவிட்டன. இன்று நான் சினிமா வானிலே ஒரு ஒப்பற்ற நக்ஷத்திரமாக விளங்குகிறேன். லக்ஷக்கணக்கான மக்கள் என்னை வானளாவப் புகழ்கிறார்கள். என்னைக் கண்டு எத்தனையோ பெண்மணிகள் பொறாமை கூடக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் என்னுடைய உள்ளம் எவ்வளவு தூரம் நொந்து போயிருக்கிறது என்பது அவர்களுக்கு என்ன தெரியும்? நான்—என்போன்ற சினிமா நடிகைகள்—உலகத்தார் நினைப்பதுபோல் சந்துஷ்டியுடன் இருக்கிறார்களா? அப்படி இருந்தாலும் அவர்களின் சந்தோஷ வாழ்க்கை என்றும் நிலைத்து இருக்குமா? ஒருநாளும் இல்லை. எங்கள் வாழ்க்கை ஒரு விட்டில் பூச்சியைப் போன்றது. எங்களிடம் அழகும் யௌவனமும் இருக்கும் வரை சுகமும் சந்தோஷமும் இருக்கும். ஆனால் அதற்குப் பிறகு உலகத்தில் யாருமே எங்களை மதிக்கமாட்டார்கள்.

இதை நான் சொல்லத் தேவையில்லை பலரும் கண்கூடாகப் பார்க்கிறார்கள் எனக்கு முன் சினிமா வானில் ஜகஜ்ஜோதியாகப் பிரகாசித்துக் கொண்டிருந்த நக்ஷத்திரங்கள் இப்போது எங்கே? அவர்களின் அழகும், யௌவனமும் போய் விட்டன. அத்துடன் ஒளியும் பெருமையும் மங்கி மறைந்துவிட்டன. ஆகவே எங்கள் வாழ்க்கை கானல் நீரைப் போன்றதுதான். இதில் உனக்கு சந்தேகமே வேண்டாம்!

இப்பொழுது நினைத்துக் கொண்டால் கூட நாம் சிறு வயதில் வாழ்ந்த வாழ்க்கை என் மனக்கண் முன்னால் வந்து நிற்கிறது. தெருத் திண்ணையில் நாம் சொப்பு வைத்து விளையாடியதையும், வீதிகளில் கயிற்றைச் சுழற்றிக் குதித்ததையும், ஓட்டாஞ்சில்லிகளைத் தூக்கிப் போட்டுப் பாண்டி விளையாடியதையும் இன்று நினைத்துப் பார்த்தால், நாம் ஏன் என்றுமே சிறுமிகளாய் இருந்திருக்கக் கூடாது என்றுதான் தோன்றுகிறது. ஆனால் காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. அதன் வேலையை அது செய்து கொண்டுதான் போகிறது.

உன் அப்பாவுக்கு மாற்றலாகி வெளியூருக்குப் போன பிறகு, எனக்கு எங்கும் வெறிச்சென்று — சூன்யமாக — இருந்தது. பொழுது போகவில்லை அம்மாவுடன் சேர்ந்து கொண்டு வீட்டு வேலைகளில் என் கவனத்தைச் செலுத்தினேன். அது என் மனதிற்குக் கொஞ்சம் ஆறுதலை அளித்தது. சில மாதங்களுக்குப்பின் நாங்களும் எங்கள் சொந்த ஊரான தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்த ஒரு சிறிய கிராமத்திற்குப் போய் விட்டோம். என் தந்

தைக்கு அங்கு ஐந்து பா
நிலம் பூர்வீக சொத்தாக
இருந்தது. அதில் வந்த
சொற்ப வருவாயிலும், என்
தந்தைக்குக் கொஞ்சம்
எழுத்து வாசனை இருந்த
தால் அந்த ஊர் வாசிக
ளுக்குக் கடிதம் எழுதிக்
கொடுத்தும், பத்திரம் முத
லியன எழுதியும் எங்கள்
குடும்பம் கஷ்ட ஜீவனம்
செய்து வந்தது. நாள் ஆக
ஆக, மழையில்லாத கார
ணத்தினுலும் குடியானவர்
களின் ஒத்து
ழைப் பின்மையி
னுலும் நிலத்தில்
சரியாக மகசூல்
காண முடிய
வில்லை. ஆகவே
என் தந்தை நில
த்தில் பாடுபடு
வதை தவிட்டு,

பட்டார். இந்த உலகத்தில் கஷ்டப்படுவிவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள். சுகப்படுபவர்கள் என்றுமே சுகப்படுகிறார்கள். இதற்கு என் தந்தை மட்டும் விதிவிலக்கா என்ன? நாளுக்கு நாள் கஷ்டம் அதிகரித்தது, கொஞ்சம் இருந்த நகை நட்டுகளை விற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. கிராமவாசிகள் எங்களைத் துச்சமாக மதித்தார்கள். எங்கள் நிலையை எண்ணி அடிக்கடி அம்மா அழுவாள். ஆனால் நானே "ஏன் அம்மா கவலைப்படுகிறாய். ஆண்டவன் ஒருவன் இருக்கிறான். அவன் நம்மையெல்லாம் காப்பாற்றுவான்" என்று ஆறுதல் சொல்வேன். திக்கற்றவர்களுக்குத் தெய்வத்தைத் தவிர வேறு துணை ஏது?

'பட்ட காலிலே படும்; கெட்ட குடியே கெடும்' என்பதுபோல் வறுமைக்குமேல் வறுமையும் கஷ்டத்திற்குமேல் கஷ்டமும் எங்கள் குடும்பத்தைப் பீடிக்க ஆரம்பித்தன. பொறுக்க முடியாத கஷ்டத்தின் பேரில் என் தந்தை நிலத்தின் மீது ஆயிரம் ரூபாய் கடன் வாங்கிவிட்டார்! தஞ்சாவூர் சர்மா என்பவர் ஒரு பணக்காரப் புள்ளி. அப்பாவுக்கும் அவருக்கும் ஆதியில் கொஞ்சம் பழக்கம் உண்டு. அந்த அபிமானத்தினால் அவர் நிலத்தின் மீது கடன் கொடுத்ததாக அப்பா சொல்லிக்கொண்டிருந்தார்.

ஏற்கெனவே வந்த வருவாய் குடும்பத்தை நடத்தவே போதுமானதாக இல்லை. இப்போது கடன் வேறு வாங்கியாகிவிட்டது. வட்டிக்கு எங்கே போவது? கடன் வாங்கிய பணம் குடும்பச் செலவிற்குக் கரைந்தது. அதிலிருந்தே வட்டியும் கட்டி வந்தார் என் தந்தை. 'அந்தப் பணம் கரைந்தபிறகு என்ன செய்வது?' என்ற பிரச்னை எழுவதற்குமுன்பே என் தந்தை எங்களை இந்த உலகத்தில் அனாதையாக விட்டுவிட்டுப் போய்விட்டார். அப்போது அம்மா வடித்த கண்ணீரையும், நெஞ்சை விட்டு நான் அலறிய அலறலையும் இப்போது என்னால் விவரிக்க முடியாது.

என் தந்தை இறந்த செய்தியைக் கேட்டுவிட்டு சர்மா எங்கள் வீட்டிற்கு வந்து எங்கள் நிலைமைக்காக பரிதாபப்பட்டார். அதற்குப் பிறகு அவர் அடிக்கடி வருவதும் எங்களுக்கு ஆறுதல் சொல்வதுமாக இருந்தார். வாழ்க்கை வெள்ளத்தில் மூழ்கித் திணறிக்கொண்டிருந்த எங்களைக் கரைசேர்க்க ஒரு புண்ணியவான் ஏற்பட்டிருப்பதைக் கண்டு என் தாயார் மன ஆறுதல் அடைந்தாள்.

ஆனால் வனஜா, உலகத்தில் ஏழை எளியவர்களின்மீது உண்மையாகவே அன்பும் பச்சாத்தாபமும் கொள்கிறவர்கள் வெகு சிலர்தான்! சர்மாவின் அத்தனை ஆறுதல் மொழிகளும் எதற்கு அஸ்திவாரம் என்பது எங்களுக்கு என்ன தெரியும்? ஒரு மாதத்திற்குப் பிறகுதான் அது புரிந்தது. தமக்கு என்னை மணம் செய்து கொடுக்கும்படியும், எங்களை அவர் சுகமாகப் பாதுகாப்பதாயும் என்னுடைய தாயாரிடம் கூறினார். என் தாயார் தயங்கினபோது, தம் விருப்பத்திற்கு இணங்காவிட்டால் கடனுக்கு நிலத்தை ஏலம் போட்டு எங்களை ஓட்டாண்டியாக்கி விடுவதாய் பயமுறுத்தினார். இதற்கு சம்மதித்தால் கடனைக் கேட்பதேயில்லை என்றும் தெரிவித்தார்.

நான் நல்ல அழகி என்பது உனக்குத் தெரியும்! அழகாய் இருந்துவிட்டால் போதுமா? சமூகம் பணத்தையல்லவா முக்கியமாகக் கருதுகிறது! எப்படியும் எனக்குப் பணம் செலவு செய்துதானே கல்யாணம் செய்தாகவேண்டும்! பணத்திற்கு எங்கே போவது? ஆகவே அம்மாவும் சம்மதித்துவிட்டாள்.

அடக் கடவுளே! அவருக்கோ வயது ஐம்பது. மனைவி இறந்து ஐந்தாறு வருஷங்கள் ஆகிவிட்டன. என்னை இளையாளாக மணந்துகொள்ள அவர் விரும்புகிறார்! ஐயோ! என்னுடைய அழகையும் யௌவனத்தையும் பணத்திற்கு பலியாக்க வேண்டுமா? என் தந்தையைவிட முதியவரான ஒருவரைக் கணவராக ஏற்றுக்கொள்வதா? என் வயதில் அவருக்கு ஒரு பெண் இருப்பதாகவும் கேள்விப்பட்டேன். முதலில் கல்யாணம் வேண்டாம் என்றுதான் இருந்தாராம். ஆனால் என்னைப் பார்த்த பிறகு அந்த எண்ணம் ஓடிவிட்டதாம். காமத்திற்குத்தான் கண் குருடாயிற்றே! 'ஏ, பகவானே! ஏழைகளை உலகத்தில் படைக்காதே! அப்படிப் படைத்தாலும் அவர்களிடம் அழகைக் கொடுத்து வாழ்க்கையை பாழாக்காதே!' என்றெல்லாம் எண்ணி விம்மி விம்மி அழுதேன். ஆனால் ஒரு முடிவிற்கு வரமுடியவில்லை.

கடைசியில் வேறு வழியின்றி சம்மதித்தேன். சர்மாவிடம் எழுதிக் கொடுத்த கடன் பத்திரத்தை என் கையினாலேயே வாங்கித் தாயாரிடம் ஒப்படைத்து விட்டேன். கல்யாண நாளும் நெருங்கிவிட்டது. ஆனால் நான் என்ன செய்யப்போகிறேன் என்பது என்னைத் தவிர வேறு யாருக்குமே தெரியாது.

கல்யாண தினத்திற்கு முன் இரவு வீட்டில் எல்லோரும் தூங்கி விட்டார்கள். நான் மட்டும் தூங்கவில்லை. வீட்டை விட்டு ஓடிவிடுவது என்று தீர்மானித்து விட்டேன். தாயாரைப் பிரிய மனம் வரவில்லை. கடைசியில், நெஞ்சைப் பிளந்து கொண்டு வந்த துயரத்தை யெல்லாம் அடக்கிக்கொண்டு வெளிக் கிளம்பிவிட்டேன். (அதற்குப் பிறகு வெகு சீக்கிரத்திலேயே என் தாயார் மனோவியாதியினால்

[தொடர்ச்சி 50-ம் பக்கத்தில்]

"விசிறிகளின் அபிலாஷைகள் எவை?" என்பதையும், அவைகளால் ஏற்படக் கூடிய பலாபலன்களையும் எடுத்துக்கொள்வோம். நக்ஷத்திரங்களை நேரில் காண வேண்டும் என்ற ஆவலும் துடிதுடிப்பும் விசிறிகளுக்கு உண்டு. இவர்களின் பலஹீனத்தை—ரகஸியத்தைத் தெரிந்து கொண்டிருக்கும் பலர் அதைத் தங்கள் ஆதாயத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளுகின்றனர். ஒரு நாடகத்துக்கோ, அல்லது ஒரு பொதுக் கூட்டத்திற்கோ, கூட்டம் கூடவேண்டுமென்றால், சம்பந்தப்பட்டவர்கள், பிரபல நக்ஷத்திரங்களைத் தலைமை வகிக்கவோ, அல்லது அதில் பங்கெடுத்துக் கொள்வதற்கோ ஏற்பாடு செய்து விடுகிறார்கள்.

* * *

தெரு, வீதி இவைகளில் தன் போலி மருந்துகளைப்பற்றிக் கூறுவதற்கு முன், கூட்டம் கூட்ட 'மாஜிக்' வேலைகள் செய்யும் சில வியாபாரிகளை இது ஞாபகப் படுத்துகிறதல்லவா! இம்முறை இன்று வெகு சகஜமாகிவிட்டது ஆனால், இந்த உபாயத்தைக் கையாண்டும்—அவர்கள் ஏற்பாடு செய்த நக்ஷத்திரத்திற்கு விசிறிகள் அதிகமில்லாத காரணத்தால்—கூட்டம் சேராமல் தங்கள் கையைச் சுட்டுக் கொண்ட பலரை எனக்குத் தெரியும்!

* * *

சில மாதங்களுக்கு முன்பு ஒரு நாடகத்துக்குத் தலைமை வகித்த ஹாஸ்ய நடிகர் என். எஸ். கிருஷ்ணன், இந்த வசூல் உபாயத்தைப் பற்றி பட்டவர்த்தனமாகவே கூறிவிட்டார். அவர் பேசுகையில், அன்று வந்திருந்த கூட்டம் நாடகத்தைக் காண வந்தது அல்ல என்றும், தம்மைக் காணவே வந்திருப்பதாகவும் சொன்னார். 'வீண் தற்பெருமை' என்று சிலர் நினைக்கக் கூடுமென்றாலும், அவர் கூறியது என்னவோ உண்மைதான்!

* * *

பொது நிகழ்ச்சிகளுக்கு, நக்ஷத்திரங்களின் விஜயத்தினால் கூட்டம் கூடும் விஷயத்திற்கு மற்றொரு சான்று கூறி விட்டு நிறுத்திக் கொள்கிறேன். நான்கு மாதங்களுக்கு முன், சென்னை மயிலாப்பூர் "ரஸிக ரஞ்சனி சபா"வில் ஒரு பாகவதரின் கதா காலக்ஷேபம் சில தினங்கள் நடைபெற்றன. ஆரம்பத்தில் அதற்கு அவ்வளவாகக் கூட்டம் இல்லை. ஒரு நாள் காலக்ஷேபத்திற்கு எதேச்சையாக வைஜயந்திமாலா வந்திருந்தார். அன்று முதல் காலக்ஷேபத்திற்கு வந்த 'பக்த கோடி'களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே போயிற்று! நக்ஷத்திரம், கதா காலக்ஷேபத்திற்குத் தொடர்ந்து வரவில்லை என்றாலும், விசிறிகளில் பலர் 'இன்று வருவார்!' என்ற நம்பிக்கையில் தினமும் வரத் தவறவில்லை. கதா காலக்ஷேபங்களையும், உபன்யாசங்களையும் ஏற்பாடு செய்கிறவர்கள் பிரசாதம் வழங்கும் உபாயத்திற்குப் பதில் நக்ஷத்திரம் யாரையாவது வந்து கலந்து கொள்ளும்படி அழைக்கும் தந்திரத்தைக் கையாளலாமே! அவர்கள் அப்படிச் செய்வதன் மூலம், செலவு மிச்சமாவதுடன், 'சினிமா விசிறிகள் இருவிதப் பலன்'களை அடையவும் உதவியாக இருக்குமே!

* * *

விசிறிகளின் முக்கிய அபிலாஷைகளில் மற்றொன்று, நக்ஷத்திரங்களின் கையெழுத்தைச் சேகரிப்பதாகும். நக்ஷத்திரங்களில் ஒரு சிலர்தான் விசிறிகளின் இந்த ஆவலைப் பூர்த்தி செய்கிறவர்கள். பெரும்பாலோர், 'ஆட்டோகிராப்'களிலோ 'செக்'குகளிலோ தவிர மற்ற எங்கேயும் கையெழுத்துப் போடத் தைரியம் இல்லாதவர்கள். கையெழுத்துப் போடும் அளவுக்குக்கூட கல்வி அறிவு இல்லாத ஒன்றிரண்டு நக்ஷத்திரங்களும் இருக்கத்தான் இருக்கிறார்கள்!

* * *

விசிறிகள், நக்ஷத்திரங்களின் கையெழுத்தை எதில் வாங்கிக் கொள்ளுவார்கள் என்று சொல்லவே முடியாது. ரூபாய் நோட்டுகளில் வாங்குகிறவர்கள்

ஜூபிடர் பிக்சர்ஸார் பொங்கல் தினத்தன்று வெளியிடப் போகும் "மர்மயோகி" தமிழ்ப் படத்தில் மாதுரி தேவியும், சகஸ்ரநாமமும் தோன்றும் ஒரு காதல் காட்சி.

உண்டு; சிகரெட் பாக்கெட்டின் பின்புறம் வாங்குகிறவர்கள் அனந்தம். அதற்கெனத் தனியே அழகான 'நோட்' புஸ்தகம் ஒன்றை தயாராக வைத்துக்கொண்டு அதில் வாங்கிக் கொள்ளுகிறவர்களும் உண்டு. இப்படி வாங்கிய கையெழுத்துகளைத் தங்கள் உயிரினும் மேலாகப் பாதுகாத்துவரும் விசிறிகள் பலரை நான் பார்த்திருக்கிறேன்.

• • •

"கிம்" என்ற ஆங்கிலப் படத்திற்கான சில காட்சிகளைத் தயாரித்துக்கொண்டு போவதற்காக, சில மாதங்களுக்கு முன் பிரபல மேனாட்டு நடிகர் எரால் பிளின் பம்பாய்க்கு விமானத்தில் வந்திருந்தார். விமான நிலையத்தில் இருந்த ஒரு உயர்தர ஆபீஸர் அவரை விசாரிக்கவேண்டிய பிரமேயம் ஏற்பட்டது. ஆபீஸர், "நீர்தான் எரால் பிளின் என்பதற்கு என்ன அத்தாட்சி. உமது கையெழுத்தை இந்தக் காகிதத்தில் போடும். நான் ஒத்திட்டுப் பார்க்க வேண்டும்" என்றார். எரால் 'டக்'கென்று அதில் தமது கையெழுத்தைப் போட்டுக் கொடுத்தார். அதைத் தம் டையில் பத்திரப்படுத்திக் கொண்ட ஆபீஸர் சிரித்தபடி, "மன்னிக்கணும், நீங்கள் எரால் பிளின் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். நான் உங்களுடைய விசிறிகளில் ஒருவன். நீங்கள் இலகுவில் உங்கள் கையெழுத்தைப் போட்டுத் தருவது கிடையாது என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆகவேதான் இந்த யுக்தி செய்தேன்!" என்று சொன்னார். அந்த மேனாட்டு நடிகர் தம் வாய்விட்டுச் சொல்லாவிட்டாலும், "இந்தியர்கள் பலேப் பேர்வழிகள்!" என்று மனதில் நினைத்துக் கொண்டிருப்பார்.

• • •

சென்னை, வெலிங்டன் டாக்கீஸில் 1935ம் வருஷம் ஒரு தமாஷான சம்பவம் நடந்தது. ஜனவரி மாதத்தில், எட்டி கான்டர் நடித்த, "ரோமன் ஸ்கேண்டல்ஸ்" என்ற ஆங்கிலப் படம் நடந்துகொண்டிருந்தது. அது சமயம், சென்னைக்கு வந்திருந்த, மேனாட்டு நடிகர், ஜான் பாரிமூர் அந்தப் படத்தைப்

பார்க்க வந்திருந்தார். ஒரு விசிறிக்கு, 'அவர் ஜான் பாரிமூராக இருக்குமோ?' என்று சந்தேகம் தட்டியது. இடைவேளையின்போது அந்த விசிறி துணிந்து, அவரிடம்போய், "ஹல்லோ, மிஸ்டர் ஜான் பாரிமூர்! உங்கள் கையெழுத்தை தயவு செய்து இதில் போடுங்கள்!" என்று ஒரு ஐந்து ரூபாய் நோட்டை நீட்டினர். அதற்கிணங்கி அவர் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார். அவ்வளவு தான்! இச்செய்தி தியேட்டரில் எல்லா விசிறிகளுக்கும் தெரிந்துவிட்டது. அன்று கையெழுத்துப் போட்டுக் கொடுத்து பாரிமூருக்குக் கைகூட வலித்திருக்கும்!

* * *

விசிறிகளில் பலருக்கு என்மீது கோபம் வரக்கூடும்; தங்களுடைய 'பிரதாபங்களைப்பற்றியெல்லாம் நான் எழுதவிட்டு விட்டேனே என்றுதான்! விசிறிகள் புராணம் மிகவும் 'பெரிய புராணம்'. எழுத எழுத நீண்டுகொண்டே போகும். ஆகவே, நக்ஷத்திரங்களுக்கான விசிறிகள் பற்றிய தகவல்களுக்கு இத்துடன் முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, நம் நக்ஷத்திரங்களில் சிலர் விசிறிகளாயிருந்த விஷயத்துக்குப் போகிறேன். விசிறிகளின் அபிலாஷைகளையும், ஆர்வத்தையும் அதனுல் அவர்களுக்கு நேரிடும் கஷ்டங்களை உணராத நக்ஷத்திரங்கள் நம் தமிழ் நாட்டில் அதிகம். அவைகளையெல்லாம் உணர்ந்து, தம் விசிறிகளிடம் அன்புடனும், கண்யமாகவும் நடந்துகொள்ளுகிறவர்களோ ஒரு சிலர்தான்.

* * *

அந்த ஒரு சிலரில், குணசித்திர நடிகர் நாகய்யா ஒருவர். அவர் விசிறியாக இருந்தவர்; ஆகவே அவர் விசிறிகளின் சங்கடங்களை தெரிந்து நடந்துகொள்ளுவதில் வியப்பில்லை. அவர் சினிமா உலகில் பிரவேசிப்பதற்கு முன்னர் நடந்தது இது. அப்போதைய சினிமா நக்ஷத்திரங்களை நேரில் பார்க்க வேண்டும் என்பதற்காக அநேக நாட்கள், மணிக்கணக்கில் படை பதைக்கும் வெய்யிலையும் லக்ஷியம் செய்யாது, 'வேல் பிக்சர்ஸ்' ஸ்டுடியோவின் வாயிலில் நின்றிருக்கிறார்.

* * *

நடிகை ரஜனியின் கையெழுத்துக்கும், போட்டோவுக்கும் வேட்டையாடும் விசிறிகள் இருக்கிறார்களோ என்னவோ,



எனக்குத் தெரியாது. ("அவைகளைப் பலர் தங்களது பொருள்களின் விளம்பரத்திற்குப் பயன் படுத்திக்கொள்வது உமக்குத் தெரியாதோ!" என்று யாரும் என்மீது சீற வேண்டாம்!) ஆனல், இந்த நடிகை மிகுந்த ஆர்வத்துடன், மேனாட்டு, வட நாட்டு நக்ஷத்திரங்களின் கையெழுத்து, போட்டோ முதலியவைகளைச் சேகரித்து வைத்திருக்கிறாராம்!

*   *   *

விசிறிகளுக்கு ஆதரவு காட்டாத நக்ஷத்திரங்களைப்பற்றி அனுதாபப்படுவதைத்தவிர வேறு என்ன செய்வது! ஆனல், தம்முடைய விசிறிகளை அவமானப்படுத்தி அனுப்பும் நக்ஷத்திரங்களின் 'மண்டை கனம்'த்தை எண்ணும்போது கோபம் தான் வருகிறது. அப்படிப்பட்டவர்களில், தமிழ்ப்பட நக்ஷத்திர நடிகர் ஒருவரது விபரீதப்போக்கை மட்டும் இங்கு சொல்லி முடிக்கிறேன். இந்த நடிகர் மயிலாப்பூர் வாசி. சென்ற வருஷம் மயிலாப்பூர் அறுபத்து மூவர் உத்ஸவத்திற்கு வந்து கூடிய ஆயிரக் கணக்கான ஜனங்களில், மேற்படி நக்ஷத்திரத்தின் விசிறிகள் சிலர் அந்த நக்ஷத்திரத்தை நேரில் பார்க்க வேண்டுமென்ற அடக்க முடியாத ஆவலால், நக்ஷத்திரத்தின் பங்களா வாயிலில் காத்து நின்றவர். அந்த நக்ஷத்திரம் என்ன செய்தார் தெரியுமா? தமது சிப்பந்திகளிடம் தமது நாய்களை அவிழ்த்துக் கூட்டத்தார் மீது ஏவி விடும்படி உத்தரவு போட்டார். அவர் மேல் மாடியில் நின்றபடி, நாய்கள் விரட்ட விசிறிகள் விழுந்தடித்து ஓடிய வேடிக்கையைப் பார்த்து ரஸித்தார்!

●   ●   ●

இந்த உலகத்தில் விரோதிகள் எவனும் இல்லாதவனே இருக்க முடியாது. அந்த நியதிப்படி சினிமா விசிறிகளுக்கும் விரோதிகள் இல்லாமல் போகவில்லை. முக்கியமாக, அந்த விரோதிகளின் வேலை—விசிறிகளின் அபிலாஷைகளுக்குத் தடை செய்வது; நக்ஷத்திரங்களை நேருக்கு நேர் சந்திக்க முடியாது குறுக்கே நின்று தடுப்பது. விசிறிகளுக்கு இம்மாதிரி விரோதிகள் அநேகர் இருக்கலாம். ஆனல் அவர்களை மூன்று பிரிவுகளுக்குள் அடக்கிவிடலாம்.

●   ●   ●

விரோதி நம்பர் ஒண்ணு: நக்ஷத்திரத்தின் பங்களா வாயிலில் 'பாரா'ப் போடப்பட்டிருக்கும் காவலாளி. இவன், அநேகமாக அரை குறைத் தமிழ் தெரிந்து கொண்டிருக்கும் கூர்க்காவாக இருப்பான். வந்தவர்களை எல்லாம் 'சலோ! சலோ!' என்று விரட்டுவதுதான் இவனது வேலை. சில சமயங்களில் நக்ஷத்திரங்களுக்கு வேண்டியவர்களையும் விரட்டிவிடுவது உண்டு! இவனிடம் மூன்று விதமான நடவடிக்கைகளைப் பார்க்கலாம். நடந்து வருபவர்களை விசாரியாமலே விரட்டுவான்; ரிக்ஷாவில் போனல் கொஞ்சம் மரியாதையாக விசாரிப்பான்; காரில் போனல் ஒரு 'சல்யூட்' அடித்துவிட்டுப் பேசாமல் உள்ளே அநுமதிப்பான்!

•   •   •

இரண்டாவது விரோதி— நக்ஷத்திரத்தின் நாய். "நக்ஷத்திர நாய்" ஆகையினல் வஞ்சனையின்றிக் கொழுகொழுவென்று வளர்ந்திருக்கும். கூர்க்காவிடமிருந்து சாமர்த்தியமாக நழுவிச்சென்றல், இரண்டாவது கண்டம் இது. பங்களா வாயிற்படியை மிதிக்க வேண்டியதுதான் தாமதம்—'வள் வள்' என்று குரைத்துத் தலைவேதனையை

[தொடர்ச்சி 68-ம் பக்கத்தில்]

ஜெமினி தயாரிப்பான "நிஷான்" ஹிந்திப் படத்தில் விக்ரமன் (ரஞ்சன்) டாக்டரிடம் முறையிடுகிருன்.

இம் மாதம் இப் பகுதியில் வெளியிட்டுள்ள கேள்விகள் காந்தீஜி ஸ்தூபி நிதிக்குக் காணிக்கையுடன் அனுப்பப் பட்ட கேள்விகள் அல்ல. 'ஸ்தூபி நிதிக் கேள்விகள்' பூராவும் அடுத்த மாதம் வெளியிடப்படும்.

—ஆசிரியர்.

வி. சுப்பராமன் (செட்டிநாடு)

பாக்யா பிக்சர்ஸார் வெளியிட்ட மங்கையர்க்கரசியில் கவி வித்யாபதியாக நடிப்பவர் யார்? அவரது விலாஸம் தேவை.

கவி வித்யாபதியாக நடிப்பவர் படங்களுக்குப் பாட்டெழுதிவரும் கவி "கம்பதாஸன்" ஆவார். விலாஸம்:—பாலு முதலி தெரு, தேனாம்பேட்டை, சென்னை—6,

பி. கணேஷ் (ராஜாபட்டி)

தீகாம்பர சாமியாரில் நடிக்கும் எம். எஸ். திரௌபதிக்கு விவாஹம் ஆகிவிட்டதா? குழந்தைகள் உண்டா?

"குழந்தைகள் உண்டா!" என்று கேட்டது தவறு. அவருக்கு ஒரே ஒரு பெண் குழந்தை மட்டும்தான் இருக்கிறது. விவாஹமும் ஆனவர்தான்.

ஆர். எஸ். முத்துஸ்வாமி (மதுரை)

அரை நிர்வாணமாய் அநேக படங்களில் நடித்து ஆடவர்களின் உள்ளங்களை அபஹரித்துள்ள அஞ்சலி தேவியை எங்கே காணலாம்?

எதற்காக! பறிகொடுத்த உள்ளத்தை அவரிடமிருந்து திரும்பப் பெற வேண்டுமோ!

கே. செல்வராசா (பரந்தன்)

என் நண்பர் கந்தசாமி பி. யு. சின்னப்பாவைப்போல் நன்ருக நடிப்பார். அவரை நீங்கள் சினிமாவில் சேர்த்து விட முடியுமா?

சின்னப்பாவைப் போலவே உம் நண்பருக்கும் அதிர்ஷ்டம் இருக்கிறதா என்பதை முதலில் தெரிந்துகொள்ளும்.

ரமணி (கொழும்பு)

மாதுரிதேவியின் தாய்பாஷை எது? எந்த மதத்தைச் சேர்ந்தவர்? விலாஸம் தெரிவிக்கவும்.

மாதுரியின் தாய்பாஷை தமிழ்தான். அவர் கிருஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர். விலாஸம்:-மாசிலாமணி தெரு, தியாகராய நகர், சென்னை—17.

எம். எஸ். பழனி (கல்லிடைக்குறிச்சி)

எஸ். ஏ. நடராஜனின் சொந்த ஊர் எது? விவாஹம் ஆகிவிட்டதா? குழந்தைகள் உண்டா?

நடராஜனின் சொந்த ஊர் தாராபுரத்திற்கு அருகிலுள்ள சோமனூத்து என்ற கிராமம் ஆகும். அவருக்கு இன்னும் விவாஹம் ஆகவில்லை. உமக்கு பெண்ணிருந்தால் ஜாதகத்தை தாராளமாய் அனுப்பும்!

வி. கே. நடராஜன் (விருதுநகர்)

பி. கே. சரஸ்வதிக்கு கல்யாணம் ஆகவில்லை என்று "குண்டூசி" முதலிய பத்திரிகைகள் கூறுவது பொய் என்றும், அவர் தேவதாஸி குலத்தைச் சேர்ந்தவரென்றும் "கல

னேசன்" என்ற பத்திரிகை கூறுகிறது. இதில் எது மெய்?

நக்ஷத்திரங்களின் வாழ்க்கை விஷயங்களை கற்பனை செய்து எழுதுவது பெருந் தவறு. நான் அந்தத் தவறை செய்ததேயில்லை—என்று உறுதியாய் கூற முடியும்.

கே. ராஜாராம் (கும்பகோணம்)

கே. கே. பெருமாளின் நடிப்பு எனக்கு மிகப் பிடித்திருக்கிறது. அவரது சொந்த ஊர் எது? எந்த ஜாதியைச் சேர்ந்தவர்?

பெருமாளின் நடிப்பு எனக்கும் பிடித்திருக்கிறது. சௌராஷ்டிர ஜாதியைச் சேர்ந்த அவரது சொந்த ஊர் கும்பகோணம்.

ரு. பொன்னம்பலம் (கண்டி)

எம். எஸ். சுப்புலக்ஷ்மிக்கு பெண் குழந்தை ஒன்று இருக்கிறதா?

எம். எஸ். சுப்புலக்ஷ்மி தாம் பெற்றெடுக்காமலே இரண்டு பெண் குழந்தைகளுக்குத் தாயாராய் விளங்குகிறார். அவையிரண்டும் கணவர் டி. சதாசிவத்தின் மூத்த மனைவியின் குழந்தைகள்.

எஸ். செல்லையா நாடார் (கொழும்பு)

எர். கே. டி. பாகவதருக்கு நான் ரிஜிஸ்டர் தபாலில் ஒரு கடிதம் எழுதினேன். இதுவரையில் அவர் பதிலே எழுதவில்லை; ஏன்?

பாகவதர் ஒருவர் மட்டும்தான் இப்படி என்று நினைக்க வேண்டாம். தமிழ்ப் பட நக்ஷத்திரங்கள் அனைவருமே இப்படித்தான். ஹாலிவுட் நக்ஷத்திரங்களைப்பற்றிப் படித்துவிட்டு நம் நக்ஷத்திரங்களையும் அவர்களுக்கு ஒப்பாக நீர் கருதினால் அது உம் தவறுதானே!

எஸ். நடராஜன் (விருதுநகர்)

உண்மையின் வெற்றியில் நடிக்கும் எஸ். மேனகா என்ன ஜாதியைச் சேர்ந்தவர்? அவருக்கு விவாஹம் ஆகிவிட்டதா?

மேனகா ஐயர் ஜாதியைச் சேர்ந்தவர்! எப்படியாவது ஒரு முன்னணி நக்ஷத்திரம் ஆகிவிட வேண்டும்—என்ற எண்ணத்திலேயே சதா மூழ்கிப் போயிருக்கும் அவருக்கு விவாஹத்தைப் பற்றிய எண்ணம் எங்கே, ஐயா, ஏற்படப் போகிறது!

ஆர். வி தாஸ் (கும்பகோணம்)

டைரெக்டர் தொழிலைக் கற்றுக்கொள்ளுவதற்கு ஏதேனும் பள்ளிக்கூடம் இருக்கிறதா? எனின், அப்பள்ளிக்கூடம் எங்கே உள்ளது?

நடிகனுக்கு நடிக்கத் தெரியவேண்டும் அல்லது பாடத் தெரிய வேண்டும். கேமிரா மென்னுக்கு அந்த இயந்திரத்தை உபயோகிக்கத் தெரியவேண்டும். மேக்கப்மென்னுக்கு மேக்கப் செய்யத் தெரிய வேண்டும். ஆனால் டைரெக்டர் தொழில் ஒன்

பார்த்தாலே தெரியவில்லையா பள்ளிக்கூட வாத்தியாராக நடிக்கிறார் என்.எஸ்.கே.—"மணமகளி"ல் என்று!

"என். எஸ். கே. பெண் பள்ளிக்கு வாத்தியாராகும்போது நாம் ஏன் ஆண் பள்ளிக்கு வாத்தியாரம்மா ஆகக்கூடாது?" என்று மதுரம் சிந்திக்கிருர் போலும் (மணமகள்)

றுக்குத்தான் யோக்யதாம்சமே அவசியமில்லைபோல் தோன்றுகிறது. நடிகர்களைக் கட்டி மேய்க்கும் திறமையும், ஒரு நல்ல உதவி டைரெக்டர் அல்லது கெமிராமென் தயவும் இருந்துவிட்டால் போதும்; ஒரு சாதாரண ஆசாமி கூட டைரெக்டர் ஆகிவிடலாம்!

"சுதி' (சேலம்)

மாடர்ன் தியேட்டர்ஸ் முதன் முதலில் தயாரித்த படம் எது?

தவமணிதேவி முதன் முதலில் நடித்த சதி அகல்யா.

"பம்பாய்த் தமிழர்கள்" (பம்பாய்)

தமிழ்ப்பட பாட்டுப் புஸ்தகங்கள் உங்களிடம் விற்பனைக்குக் கிடைக்குமா? கிடைக்காது என்ருல் வேறு எங்கே கிடைக்கும்?

எங்களிடம் இப்புத்தகங்கள் விற்பனைக்குக் கிடையாது. அந்தந்தப் படங்களின் முதலாளிகளுக்கு நீரே எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். ராமகிருஷ்ணன் (கான்பூர்)

சந்திரிகா, திகம்பர சாமியார் ஆகிய இவ்விரு படங்களின் வட இந்திய விநியோகஸ்தர்கள் யார் என்பதைத் தெரிவிக்கவும்.

சந்திரிகா: ஸ்ரீகிருஷ்ணு புரொடக்ஷன்ஸ், 162 மௌன்ட் ரோடு, சென்னை. திகம்பர சாமியார்: மாடர்ன் தியேட்டர்ஸ், சேலம்.

எம். சின்னராசா (திரிகோணமலை)

டி. ஆர். மஹாலிங்கத்தின் நிரந்தர விலாஸத்தை தெரிவிக்கவும்.

மஹாலிங்கத்தின் பேச்சும், நடத்தையும்தான் நிரந்தரமானதாய் இல்லையே தவிர, அவர் இருப்பதென்னவோ ஒரு நிரந்தரமான வீட்டில்தான்! 129 ராயப்பேட்டை ஹை ரோடு, மைலாப்பூர், சென்னை—என்று எழுதும்.

கே. வி. கோவிந்தன் (இலங்கை)

வாஹினி ஸ்டுடியோவின் விலாஸத்தைத் தெரிவிக்க முடியுமா?

இந்தியாவில் மிகப் பெரிய
பட்டணம் பொடி தொழிற்சாலை

THE LARGEST SNUFF
FACTORY IN MADRAS



N.V.SHUNMUGAM & Co
MADRAS SNUFF
HIGHLY SPOKEN BY THE PUBLIC.

N. V.
ஷண்முகம் கம்பெனியார்
தபால் பெட்டி 555 - மதராஸ்.

நீங்கள் ஒரு
சினிமா நடிகர்
ஆகலாம்

நீங்கள் ஒரு சினிமா நடிகர் அல்லது நடிகை ஆகி மாதத்திற்கு ரூ. 100 முதல் 500 வரை சம்பாதிக்க விரும்புகிறீர்களா? எனின். எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்கு அதிகப் படிப்பு இல்லாவிட்டாலும் பரவாயில்லை நேரில் வருபவர் கடிதம்எழுதினாலொழிய நேரில் வரவேண்டாம்.

டைரெக்டர் :

NATIONAL FILM
CORPORATION
(G. M.)
147, Model Town,
Jullunder.

வாஹினி ஸ்டுடியோ, கோடம்பாக்கம், சென்னை.

கே. பி. ஏ. பாருக் (மன்னார்)

எம். வி. ராஜம்மாவுக்கு விவாஹம் ஆகிவிட்டதா? கணவருடைய பெயர் என்ன? குழந்தைகள் உண்டா?

ராஜம்மாவுக்கே மறந்துபோன—சுமார் இருபது வருஷங்களுக்கு முன்பாக நடந்த (விவாஹ) விஷயத்தைப்பற்றி சாவதானமாய் கேட்கிறீர்! ராஜம்மாவின் கணவர் வீரப்பா என்பவர். ராஜம்மாவின் தாய்மை அன்பை குழந்தைகளுக்குப் பதில் இரண்டு நாய்க் குட்டிகளே பெற்று வருகின்றன!

பி. சுந்தர்ராஜ் (உடையகுளம்)

இதயகீதம் படத்தில் கத்திச்சண்டை செய்வது மஹாலிங்கமா? அல்லது அவருக்குப் பதில் வேறு யாராவது சண்டை செய்கிறாரா?

மஹாலிங்கம் கத்திச் சண்டையிடுவதாக வெறுமனே பாவனைதான் செய்கிறார். உண்மையில் வேறு ஒருவர்தான் அவருக்குப் பதில் சண்டையிட்டிருக்கிறார்.

ஏ. பி. ரங்கன் (சென்னை)

ஏழை படும்பாடு படத்தில் கந்தன் பலகாரம் திருடியதற்காக சிறை தண்டனை பெறுவதாகக் காட்டியிருப்பதற்குப் பதில், ஒரு பணக்காரன் வீட்டில் தானிய மூட்டையைத் திருடித் தண்டனை பெறுவதாய் காட்டியிருக்கலாம் அல்லவா?

இன்னும் எப்படி எப்படி வேண்டுமானாலும் காட்டியிருக்கலாம். ஆனால் மூலக் கதையில் ஆசிரியர் படத்தில் உள்ளது போல்தான் எழுதியிருக்கிறார். பசிக்காக (அரிசி மூட்டைக்குப் பதில்) பலகாரத்தைத் திருடித் தண்டனை பெறுவதன்மூலம்தான் நமக்கு அதிக பச்சாதாபம் ஏற்படும்.

ஏ. ராமன்குட்டி (ஜோகூர், மலாயா)

வாழ்க்கை படத்தில் திரௌபதி, வைஜயந்தி இருவருள் யாருக்கு நடிப்பில் முதல் ஸ்தானம் அளிக்கலாம்?

அழுவதில் திரௌபதிக்கும், சிரிப்பில் வைஜயந்திக்கும் முதல் பரிசு அளிக்கலாம்!

ஜி. ஆர். லக்ஷ்மணனின் டைரெக்ஷனில் தயாராகியிருக்கும் 'லாவண்யா' தமிழ்ப் படத்தில் நடிக்கும் குமாரி கமலா.

[illegible] தெலுங்குப் பட்த்
தில் ரகுராமய்யாவும், காஞ்சனு
வும் நடிக்கும் ஒரு காதல் காட்சி

நாகூர் ஸினி புரொடக்ஷன்ஸின்
சந்திரவங்காவில் யாரையோ மயக்
கும் ஜூனியர் லக்ஷ்மிராஜ்யம்

ஜி. வரலக்ஷ்மி நடிக்கும் பிரதிபாவின் சொப்பன சுந்தரி தெலுங்குப் படம் இப்பொழுது சென்னையில் இரு தியேட்டர்களில் காண்பிக்கப் படுகிறது

கம்பர் வேஷத்தில்
தாடியுடன் தோன்றி
மிகப் புகழ்பெற்ற
சாமாவுக்கு ஜூபிட
ரின் மாயயோகியில்
இந்த தாடி வேஷமே
புகழை கொடுக்குமாம்

லாவண்யா பிக்சர்ஸார் வெளியிட்டுள்ள பாரிஜாதத்தில் கிருஷ்ண வேஷத்தில் காட்சியளிக்கும் மஹாலிங்கம்.



குளிர் தாங்கவில்லை; விசிறுவதை நிறுத்திவிட்டு, இப்படி சும்மா உட்கார்!—என்று சின்னப்பா மங்களத்தினிடம் கூறுகிறார் போலும்! (சுதர்சன்)

ஜெமினியின் நிஷான் ஹிந்திப் படத்தில்
கவர்ச்சிகரமாய் காட்சியளிக்கிறார்
தென்னிந்திய நடிகை பானுமதி.

பொதுஜனம் பேசுகிறார்

*எங்கள் கதி

தற்பொழுது பட உலகிலே காதல் கட்டங்களை அதிகமாகப் புகுத்தி இளஞ் சிறுவர்களை மிகவும் மோசமான நிலைக்குக் கொண்டு வந்து விட்டார்கள் சில பட முதலாளிகள். என்னைப் போன்ற பெற்றோர்களுக்கல்லவா அதனுடைய கஷ்டங்கள் தெரியும். சில மாதங்களுக்கு முன் சர்க்கார், 'சிறுவர்களின் நலத்தை ஒட்டி பெரியவர்களுக்கு மட்டும்தான் காட்டலாம் என்று சர்க்கார் தீர்மானிக்கும் படங்களை தியேட்டர்காரர்கள் சிறுவர்களுக்குக் காட்டக் கூடாது' என்று ஒரு சட்டம் கொண்டு வர யோசித்திருப்பதாகப் பத்திரிகைகளில் படித்தேன். இச்சட்டம் அமுலுக்கு வரும் தேதியை என்னைப் போன்ற பெற்றோர்கள் ஆவலுடன் எதிர்பார்த்தார்கள். சிறுவர்கள் நல்ல வழியில் திருந்துவார்கள் என்று எண்ணினோம். ஆனால் அந்தச் சட்டம் அமுலுக்கு வருவதற்குள் நம் சிறுவர்கள் கெட்டுக் குட்டிச் சுவராகி விடுவார்களோ என்று அஞ்சுகிறேன். இப்பொழுது வெளிவரும் படங்கள் சில அப்படியிருக்கின்றன. பட முதலாளிகள், பெற்றோர்களாகிய எங்களை மனதில் கொண்டு சட்டம் அமுலுக்கு வரும் வரையிலாவது படங்களில் காதல் காக்ஷிகளை அளவோடு வெளியிடுவார்கள் என்று முழு மனதுடன் நம்புகிறேன்.

எம். எஸ். ராமச்சந்திரன்
சோதியக்குடி

பகிஷ்கரியுங்கள்!

படத்திலுள்ள ஆபாசக் காட்சிகள் பற்றியும், அதை நடிக்கும் நடிகைகளைப் பற்றியும் ஒரு சில பத்திரிகைகள் நேர்மையான முறையில் திருந்தும்படி கண்டிக்கின்றன. ஆனால் சில பத்திரிகைகளோ சீர்திருத்துவதாக எண்ணி, வாசிக்க மனம் கூசும் வார்த்தைகளால் ஏன் திட்ட வேண்டும்? படத்தில் காணும் ஆபாசக் காட்சிகள் பார்ப்போரின் உள்ளத்தை அருவருப்படையச் செய்வது போல், ஆபாச வார்த்தைகள் படிப்போரின் மனதை அருவருப்படையச் செய்யாதா! "உடல் அங்கங்களைக் காட்டிப் பணம் வாங்கும் மானங்கெட்ட நடிகை—தன் வாழ்க்கையில் விபசாரத்தையே தொழிலாகக் கொண்டவள்; அதனாலேயே நடிகை ஆனவள் இப்படியாக வார்த்தைகளைப் பச்சை பச்சையாக எழுதுவதுதான் சீர்திருத்த முறையா? இதுவா ஆபாசக் காட்சிகளையும், அப்படி நடிக்கும் நடிகைகளையும் திருத்தும் முறை? வாசிப்போரின் உள்ளத்தை அருவருப்படையச் செய்யாமலும், ஆபாசக் காட்சிகளையும்-அந்த நடிகைகளையும் நல்ல முறையில் திருத்த முடியாதா? நடிகைகளை மட்டும் குறை கூறுவதில் பயனில்லை; பலனில்லை. முதலாளிகளின் பண ஆசையுமல்லவா அதற்குக் காரணம்! இவ்வாறான விமர்சனங்கள் கொண்ட பத்திரிகைகளை ரஸிகர்கள் பகிஷ்கரிக்க வேண்டும்!

சி. கூத்தன், ஆயிங்குடி.

என் வேண்டுகோள்!

'குண்டூசி' அன்பர்களே! எங்க நாட்டிலும் "ஜாதிமத பேதம் காட்டக் கூடாது", "ஜாதி பேதம் ஒழிய வேண்டும்" என்று பெரியவர்களெல்லாம் பிரசங்கம் செய்கிறார்கள் ஒரு புறத்தில்! மறு புறத்தில் நடப்பவை என்ன? பாடசாலையிலும் சரி, உத்தியோகத்திலும் சரி ஒரு விண்ணப்பத் தாளை எடுத்தால் "ஜாதி என்ன?", "மதம் என்ன?" என்ற கேள்விகள் தான் முதலில் எழுகின்றன. இப்படிப் போய்க் கொண்டிருந்தால் ஜாதி பேதம் செழிப்பாக வளருமேயன்றி அடியோடு தரைமட்டமாகாது. நான் இங்கு இதைச் சொல்ல வரவில்லை. இதன் நிமித்தம்

* பரிசு பெற்ற கடிதம். எழுதியவர்: எம். எஸ். ராமச்சந்திரன் சோதியக்குடி

'குண்டூசி' அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்! அதாவது நீங்கள் 'குண்டூசியைக் கேளுங்கள்' என்ற பகுதிக்கு அனுப்பும் கேள்விகளில், "இந்த நடிகர் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்", "அந்த நடிகை எந்த ஜாதியைச் சேர்ந்தவள்" என்பதுபோன்ற ஜாதியை இழுக்கும் கேள்விகளைக் கேட்க வேண்டாம் என்பதுதான். இப்படி நீங்கள் செய்தீர்களானால் உங்கள் மூலம் உலகம் முழுதுள்ள ஜாதிபேதத்தை அழிக்க முடியாவிட்டாலும், அதன் எட்டிலொரு பாகத்திலாவது (சினிமா—உலகத்தின் எட்டு பெரிய தொழில்களில் ஒன்று) அழிக்க முடியுமல்லவா! இப்படிச் செய்து வெற்றி அடைந்தால் அதன் பெருமை யாருக்கு உரித்தாகும்! 'குண்டூசி'க்கும் அதன் அன்பர்களாகிய உங்களுக்கும் தானே! ஆதலால் இன்றிலிருந்தே முயற்சியுங்கள்; வெற்றி நிச்சயம்!

"ஜீவன்"—கொழும்பு 10

தியேட்டர் தொழிலாளி

சினிமாத் தியேட்டர் தொழிலாளிகளில், மானேஜர் முதல் கேட்-கீப்பர் வரையில் உள்ள அனைவரும் ரத்தமின்றி, ஊக்கமின்றி, உற்சாகமின்றிக் குன்றிப் போய் இருப்பார்கள். காரணம், அவர்களுடைய உறக்கமின்மையே தான். இயற்கையிலே மனிதன் பகலிலே வேலை செய்து, இரவில் தூங்க வேண்டும். இவர்களோ இரவு வேலை செய்து பகலில் தூங்குகிறார்கள். அவர்களுக்குப் பொது ஜனங்கள் எவ்வளவுதான் எடுத்துக் கூறினாலும் அவர்கள் கேட்க மாட்டார்கள். காரணம், முதலாளியினுடைய பணத்தாசையும் தொழிலாளியினுடைய வயிற்றுப்பசியும்தான். இப்படியே வேலை செய்யும் தொழிலாளி பத்து அல்லது பதினைந்து வருஷம் வேலை பார்ப்பானாகில் அவனுக்குக் கடும் நோய் ஏற்பட்டு சாகிறான்; அல்லது சாகாமல் நடைப் பிணமாக ஜீவிக்கிறான். இவர்களுடைய தொழில் முறையை மாற்றியமைக்கவேண்டும். பகல் மூன்று மணிக்குத் தொடங்கி இரவு பத்து மணிக்குள் இரண்டு காட்சிகளையும் முடிக்கவேண்டும். அல்லது ஒருநாள் ஒரே காட்சி போதுமென்று, மாலை ஆறு மணிக்குத் தொடங்கி பத்து மணிக்குள் முடிக்கவேண்டும். இந்த இரண்டு கருத்துக்களில் ஒன்றையாவது

ரொக்கப் பரிசு ரூ. 1000
(ஒரு அபூர்வ சக்தியுடையது)

மாய மோதிரம்

இந்த மோதிரம் மாயா ஜாலத்தாலும் மெஸ்மரிஸ சக்தியாலும் தயாரிக்கப் பட்டது. யாராவதொருவர் இம் மோதிரத்தை அணிந்துகொள்ளுங்கள்; உங்கள் காரியங்களில் வெற்றியோ, அல்லது, உங்களிடம் பணிவோ ஏற்படச் செய்யும்; உங்களை எல்லாவித ஆபத்துக்களிலிருந்தும் இது காப்பாற்றும். துர்த் தேவதைகள் உங்களிடம் அணுகாது. இந்த மாய மோதிரத்தை அணிந்து கொண்டவர்களிடம் ஆண், பெண் அடங்கி நடப்பார்கள். இவர் பெயரைக் கேட்டாலே நடுங்குவர். காணாமற் போனவர்களை கண்டறியலாம். நீங்கள் காதலில் வெற்றியும், கோர்ட்டு வழக்குகளிலும், உத்தியோக உயர்விலும், அதிகப் பணம் சம்பாதிப்பதிலும் வெற்றியடைவீர்கள். சுருங்கச் சொன்னால் இம் மோதிரம் ஒரு பாதுகாப்பாளரைப் போன்றது. ஒரு முறை பரீக்ஷியுங்கள். முதல் இரவிலேயே பலன் காண்பீர்கள். இதன் விலை ரூ. 1-15-0. ஸ்பெஷல் ரூ. 3-0-0 ஸ்பெஷல் அதிக சக்தி வாய்ந்தது ரூ. 3-15-0. தபால் செலவு தனி. பலனில்லையென்றால் பணம் வாபஸ் செய்யப்படும்.

PRINCIPAL, BENGAL MESMERISM HOUSE (G.M.) Jullundur City, Pb.

நடைமுறையில் கொண்டு வரவேண்டும். அரசாங்கம் நினைத்தால்தான் இது சாத்தியமாகும். அரசாங்கம் இவ்விஷயத்தில் அக்கரை செலுத்துமா?

ப. சௌந்திரபாண்டியன் பிள்ளை,
மார்த்தாண்டம்.

சரிநிகர் சமானம்!

தற்போது ஜனசங்கியையில் பெண்களே அதிகமாக இருக்கிறார்கள். தற்காலத்தில் சினிமாப் பார்க்க, ஆண்களைப் போலவே பெண்களும் சம எண்ணிக்கையில் வருகிறார்கள். ஆனால் சினிமாத் தியேட்டர்களில் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் இடம், ஆண்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் இடத்தில் நான்கில் ஒரு பகுதி கூட இல்லை. பெண்கள் அந்தச் சிறிய இடத்தில் மிகவும் நெருக்கடியுடன் அல்லல் படுவதுடன் இடத்திற்காகப் பெரும் கூச்சலும் போடுகிறார்கள். இவ்வித சம்பவத்தை நான் அநேக தியேட்டர்களில் கண்டுள்ளேன். ஆகையால், தியேட்டர் சொந்தக்காரர்கள் பெண்களுக்கான இடத்தை, பொது மக்களின் சௌகரியத்தையும், சுகாதார வசதியையும் உத்தேசித்து, கொஞ்சம் விஸ்தரிக்க வேண்டும்.

ஆர். குப்புசாமி
பண்ருட்டி.

ஏன் தயக்கம்?

சென்னை சினிமா ரஸிகர் சங்க ஆண்டு விழாவில் கனம் மந்திரி மாதவமேனன் பேசிய பொழுது, "சினிமாவில் புகைபிடிப்பதைத் தடுக்க சர்க்கார் விரும்பினாலும், அப்படி மீறிப் பிடிப்பவர்களைத் தண்டிக்க சட்டம் கொண்டுவர தங்களுக்கு அதிகாரம் இல்லையென்றும், காரணம், மேற்படி புகைபிடிப்பவர்கள் தங்களுடைய தனிநபர் உரிமையை அந்தச் சட்டம் பாதிக்குமென்று சர்க்கார் மீது வழக்கு தொடரக்கூடும் என்று கூறினார். மிகுந்த எதிர்ப்பின்பேரில் மதுவிலக்கை வலுக் கட்டாயமாகக்கொண்டு வந்த நம் சர்க்கார் இந்தச் சிறிய காரியத்தைச் செய்வதற்கு இவ்வளவு பயப்பட வேண்டிய அவசியமில்லை. அதிலும் எங்கும் புகை பிடிக்கக் கூடாதென்று யாரும் தடை சொல்லவில்லை. சினிமா, நாடகக் கொட்டகைகளில்தான் பிடிக்க வேண்டாமென்று சொல்கிறோம். 'சுதந்திர இந்தியாவில் புகை பிடிக்கத் தடையா?' என்று சிலர் கேட்கலாம். ஆனால் அந்த சிலருடைய சுதந்திரத்திற்காக, பலர் கொட்டகைகளில் கஷ்டப்

"நிஷான்" ஹிந்திப் படத்தில் ரஞ்சன் இரு வேஷங்களில் போற்றத்தக்க முறையில் நடித்திருக்கிறார்.

படுவதைத் தடுக்க சர்க்கார் சட்டம் அவசியம் கொண்டுவர வேண்டும். தியேட்டர்களில் புகைபிடிப்பவர்களில் சிலரே தங்களால் மற்றவர்களுக்கு இடைஞ்சல் உண்டாகிறது என்ற உண்மையை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் சர்க்கார் இம்மாகாணம் முழுவதும் சினிமாக் கொட்டகைகளிலும், நாடகக் கொட்டகைகளிலும் புகை பிடிப்பதைத் தடை செய்து, மீறுபவர்களை தண்டிக்க சட்டம் இயற்ற வேண்டும். கொட்டகைகளில் பீடி, சிகரெட் விற்பதையும் தடுக்க வேண்டும். வேண்டிய அளவு ஆதரவு மக்களிடமிருந்தும், சினிமா ரஸிகர்களிடமிருந்தும் நிச்சயம் கிடைக்கும். சினிமாப் பத்திரிகைகள் இந்த விஷயத்தை வற்புறுத்தி, இதை சர்க்கார் உணரும்படி எழுத வேண்டும்.

நெ. இராஜரத்னம்
திருச்சி.

வாஸனை வாழ்த்துகிறேன்!

அக்டோபர் மாத "குண்டூசி"யில், 'ஸ்ரீ, வாஸன் யோசனை' என்ற தலையங்கத்தைப் படித்துப் பார்த்தேன். அதைப் படித்ததும் என் மனம், 'சினிமாத் தொழிலில் இப்படிப்பட்ட தாராள மனப்பான்மையுடைய ஒருவர் இருக்கிறாரா?' என்று எண்ணி வியப்படைந்தது. அவர் கூறியிருப்பதைப் போல் பகல் நேரங்களில் தியேட்டர்கள் எல்லாம் காலியாகவே இருக்கின்றன. அந்த நேரங்களில் தியேட்டர்களை முதியோர்களுக்குக் கல்வி போதிப்பதற்காகவோ, வேறு பொதுஜன உபயோகத்திற்காகவோ பயன்படுத்திக் கொள்ளலாம். இட நெருக்கடி ஏற்பட்டுள்ள இந்தக் காலத்தில் இந்த யோசனை மிகவும் பொருத்தமானதாகும்.

ஸ்ரீ. வாஸன் சினிமாவிற்கு மட்டுமல்லாது பொதுஜன நன்மைக்கும் ஒத்துழைப்பவர் என்பது அவரது யோசனையில் பிரதிபலிக்கிறது அவருடைய யோசனையை ஏற்று தியேட்டர் முதலாளிகளும் சர்க்காரும் அதை உடனடியாக அமுலுக்குக் கொண்டு வருவார்கள் என்று நம்புகிறேன்.

வி. சுப்பையா
கொழும்பு.

வசீகர ஸென்ட்

நவயுகத்தின் நிகரற்ற அதிசயம்

எங்கள் 'வசீகர ஸென்ட்', காதலில் ஏமாற்றமுற்று வாழ்க்கையில் வெறுப்புற்றோருக்கு மதிப்பில்லா மாணிக்கமாகும். எந்த ஆணை அல்லது பெண்ணை வசப்படுத்த விரும்புகிறீர்களோ அவர் அருகில் இந்த ஸென்டை சில துளிகள் தெளியுங்கள். உடனே அவர் உங்கள் வசப்பட்டுவிடுவார். பிறகு உங்களைப் பிரிய அவருக்கு மனமே வராது. நூற்றுக் கணக்கானவர்கள் இதைப் பரீக்ஷித்திருக்கிறார்கள். தினசரி ஏராளமான பாராட்டுக் கடிதங்கள் வந்து குவிகின்றன. கிரக பீடைகள், நோய், இவைகளிலிருந்து காப்பாற்றி ஐசுவரியத்தை அளிக்கும். வழக்குகளிலும், பரீக்ஷைகளிலும் வெற்றி, உத்தியோக உயர்வு, எல்லாம் ஏற்படும். உங்கள் நோக்கம் எதுவானாலும் பலிக்கும். ஒரு தடவை பரீக்ஷியுங்கள். நூற்றுக்கு நூறு வெற்றி ஏற்படும். பலன் இல்லையென்றால் பணம் வாபஸ் செய்து விடுவோம். விலை ரூ. 1—15—0; தபால் செலவு தனி. வெளி நாடுகளுக்கு—5 ஷில்லிங் பி. பி. ஓ. இரண்டு புட்டிகள் ரூ. 3—4—0; வெளிநாடுகளுக்கு—8 ஷில்லிங் பி. பி. ஓ.

PROFESSOR,
B. S. DHAMI (MESMERIST)
(G. M.) JULLUNDUR City, (Pb)

சிங்கார வாழ்வு

எம். எஸ். தணிகாசலம்

"என் வாழ்க்கையை நானே கெடுத்துக் கொண்டேன்" என்ற சஞ்சல சிந்தனையுடன் ஒரு ஞாயிற்றுக் கிழமை மாலை என் அறையில் சோபாவின்மேல் சாய்ந்திருந்தேன். என் கண்கள் பாதி மூடியிருந்தன.

சிறிது நேரத்திற்கெல்லாம் என் அறைக் கதவு திறக்கப்பட்டது. நான் விழித்துப் பார்த்தேன். என் முன் வந்து நின்றான் நண்பன் கண்ணன்.

"என்ன மூர்த்தி! ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருக்கிறாய் போலிருக்கிறதே. உம்!" என்று கூறிப் பெருமூச்சுவிட்டு, "என் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களைப்போல் உன் வாழ்க்கையில் நடந்திருந்தால் இன்னும் எவ்வளவு கவலைப்படுவாயோ" என்று ஆரம்பித்தான் கண்ணன் தன் கதையை.

"கண்ணா! எனக்குத்தான் கவலை என்றால் உனக்குக்கூடவா கவலை! பணக்கார வீட்டுப்பிள்ளை நீ. பெற்றோர்களுக்கோ நீ ஒரே பிள்ளை. நல்ல அழகுள்ள பணக்காரப் பெண்ணைத் தேடி, ஆடம்பரமாக மணம் செய்து கொள்ளப்போகிறாய். மணமாகிவிட்டால் உன் வாழ்க்கையில் ஒரே ஆனந்தம்தான்" என்று சொல்லி முடித்தேன்.

ஏனோ தெரியவில்லை. கண்ணன் கண்களிலிருந்து ஜலம் தானாகவே ஆறாகப் பெருகிற்று.

"என்ன கண்ணா! ஏன் திடீரென்று கண்ணீர் விடுகிறாய்?" என்று நான் பல தடவைகள் கேட்டும் அவன் பதில் பேசாமலிருந்தான்.

நான் ஒன்பதாம் வகுப்புப் படிக்கும் வரையில் கண்ணனும் என் கூடவேதான் படித்துவந்தான். இருவரும் பத்தாவது வகுப்பில் படித்துக்கொண்டிருந்த போது, கண்ணனின் தந்தை மாயவரத்திற்கு மாற்றப்பட்டமையால் அவர் தன் குடும்பத்துடன் மாயவரத்திற்குப் போய் விட்டார். அதன்பிறகு நாங்கள் சந்திக்கவில்லை. எங்கள் கடிதங்கள் தாம் சந்தித்து வந்தன.

என் பெற்றோர்கள் நன்றாகப் பாடக் கூடியவர்கள். அதன் பலனாக நான் இயற்கையாகவே பாடும் சக்தியைப்பெற்றிருந்தேன். பள்ளிக்கூட நாடகங்களில் என் பாட்டு காரணமாகவே, என்னை நடிக்கச் செய்வார்கள். ஒரு சமயம் பள்ளியில் நடந்த "சிந்தனை" என்ற நாடகத்திற்கு நான் கதாநாயகனாகத் தேர்ந்தெடுக்கப் பட்டேன். என்னுடன் கதாநாயகியாக குமாரி சகுந்தலா என்ற பெண்ணை நடிக்கச் செய்தனர். அந்த நாடகத்தில் நாங்கள் இருவரும் வெள்ளிக் கோப்பைகள் பரிசுபெற்றோம். மெதுவாக மறைந்தன இரண்டு வருஷங்கள்.

நான் ஆரும்பாரம் தேறி காலேஜில் சேர்க்கப்பட்டேன். என் வாழ்க்கையை ஆனந்தமாகச் செய்வதற்காகவோ என்னவோ தெரியவில்லை, குமாரி சகுந்தலாவும் அதே காலேஜில் சேர்க்கப்பட்டிருந்தாள். சில சமயங்களில் எதிர்பாராதவிதமாய் வழியிலும், மாடிப்படிகளிலும் நாங்கள் சந்திப்போம். ஆனால் அவள் பேச வாயெடுப்பாள். நாணத்தினால் பேசத் தான் வராது. எனக்கும் அப்படியே தான்.

காலேஜில் முதல் வருஷப் பரீட்சை முடிந்தது. அதற்குப் பிறகு இரண்டு நாள் தான் காலேஜ் இருந்தது. அதன் பின் தான் இரண்டரை மாத கோடை விடுமுறை ஆரம்பம். அன்று மாலை ஆறு மணிக்குக் காலேஜைவிட்டு வெளியேவந்து கொண்டிருந்தேன். என்னை யாரோ கூப்பிட்ட குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்த பொழுது ஆச்சரியம் அடைந்தேன். சகுந்

தலாவேதான் என்னை அழைத்தவள். இவ்வளவு நாளும் சமூகத்திற்குப் பயந்தே பேசாமல் இருந்த நாங்கள் அன்றுதான் முதன் முறையாகப் பேசினோம். மறுநாள் முதல் கடற்கரையிலும் சினிமாக் கொட்டகைகளிலும் நினைத்த இடங்களிலெல்லாம் சந்தித்து என்னை இன்ப ஆற்றில் ஓடாத கப்பலாக்கிவிட்டாள் அவள். சில தினங்களுக்குப்பின் ஒரு நாள் ஏனோ தெரியவில்லை சகுந்தலா மிகவும் தாமதித்து வந்தாள். வந்தவுடன் என்னைத் தலை நிமிர்ந்து கூடப் பார்க்காமலேயே, "மறந்து விடுங்கள் என்னை!" என்று சொல்லி விம்மி விம்மி அழுதாள்.

நான் விஷயம் புரியாது திகைத்தேன். அவளை சமாதானப்படுத்தி விஷயத்தைச் சொல்லும்படி கேட்டேன்.

அவள் விம்மியபடியே, "நாங்கள் இன்றிரவு மெயிலில் மாயவரத்திற்குச் செல்கிறோம். என் மாமன் மகன் அங்கிருக்கிறாராம். அவரையே நான் மணம் செய்துகொள்ள வேண்டுமாம்" என்று தளர்ந்த மனதுடனும் கூறினாள். தான் அன்று சீக்கிரம் வீட்டுக்குப் போகவேண்டுமென்று சொல்லி, மணம் பிரியாத மலரைப்போல் என்னைச் சிந்தனை வாழ்வில் விட்டுப்போய் விட்டாள்.

சில நாட்கள் சில வருஷங்களாகத்தான் சென்றன எனக்கு. சில சமயங்களில் அவளைப்பற்றிய நினைவுகள் வரும். பிறகு மறைந்துவிடும். அவள் இல்வாழ்க்கையில் சுகமாக வாழவேண்டும் என்பதே என் ஓயாத பிரார்த்தனையாக இருக்கும். இவ்வாறு இருந்தது என் சிந்தனை வாழ்வு. இந்த சமயத்தில், சென்ற ஞாயிற்றுக் கிழமை காலையில் எனக்கு ஒரு கடிதம் வந்தது. நான் அதை மிகுந்த ஆவலுடன் பிரித்துப் பார்த்தேன்.

அன்புள்ள மூர்த்திக்கு,

எனக்கு இன்னும் மணமாகவில்லை. ஆனால் நம்மிருவருக்கும் ஏற்பட்ட சிந்தனை வாழ்வின் அடையாளமாக என் வயிற்றில் சிசு தோன்றிவிட்டது. விவரமாகச் சொல்லவேண்டாமென்று எண்ணுகிறேன். நான் தற்போது ஏழுமாத கர்ப்பிணியாய் இருக்கிறேன். மானமிழந்து, மனமுடைந்து வாழும் எனக்கு



சதா உங்களைப்பற்றிய நினைவுதான். இக்கடிதம் உங்களிடம் சேருமுன்—என் உயிர் சமூகத்தின் சட்டத்திற்குப் பயந்து பலியாகும். மன்னிக்கவும்.

இப்படிக்கு,
தங்களை மறவாத
சகுந்தலா.

இக் கடிதத்தைப் படித்ததும் மாயவரத்திற்குப் புறப்பட வேண்டுமென என் உள்ளம் துடித்தது. கிளம்பிவிடவும் தீர்மானித்த சமயத்தில்தான் வந்தான் நண்பன் கண்ணன்.

கண்ணன், "மூர்த்தி, நான் மாயவரத்திலிருந்து வந்ததே உன்னைப் பார்த்து என் கவலையைப் போக்கிக் கொள்ளத்தான்" என்றான்.

"என்னவோ அப்படிப்பட்ட அபூர்வக் கவலை உனக்கு!" என்றேன் நான்.

இந்தியாவில் மிகப் பெரிய
பட்டணம் பொடி தொழிற்சாலை

THE LARGEST SNUFF
FACTORY IN MADRAS

N.V. SHUNMUGAM & Co.
MADRAS SNUFF
HIGHLY SPOKEN BY THE PUBLIC.

N.V.
ஷண்முகம் கம்பெனியார்
தபால் பெட்டி 555 - மதருஸ்.

அற்புதத் தயாரிப்பு

இரவு பகல் நேரங்களில் ஸ்கலிதம் தானாக வெளியாவதைத் தடுக்க சிறந்த ஔஷதம். இது அத்யாச்சர்யத்தக்க குணத்தை உடனே ஏற்படுத்தும் தினசரி ஏராளமான ஆர்டர்கள் வந்து குவிகின்றன. சென்ற 30 வருஷங்களாக உபயோகிக்கப்படும், நிச்சயமாய் குணம் அளிக்கும் மருந்து இது. விலை ரூ. 2-15-0. தபால் செலவு தனி. பலனில்லை என்று நிரூபித்தால் பரிசு ரூ. 500.

"மண வாழ்க்கையின் மர்மங்கள்" என்ற புஸ்தகம் வேண்டுவோர் 4 அணா ஸ்டாம்ப் அனுப்பிப் பெறலாம்.

Khandani Hakim Kaviraj
B. S Dhami,
(G. M.) Adda Kapurthala,
JULLUNDUR CITY.

"என் அத்தை மகள்" சகுந்தலாவை என் வாழ்க்கைத் துணைவியாக்க நினைத்தார்கள் என் பெற்றோர்கள். ஆனால் அவளுக்கு உண்மைக் காதலன் வேறொருவன் இருக்கிறான் என்பதை—பிராணத் தியாகம் செய்துகொள்ள இருந்த அவளிடமிருந்து தெரிந்து கொண்டேன்" என்றான்.

"என்ன, குமாரி சகுந்தலா உனது அத்தை மகளா!" என்றேன் ஆச்சரியத்துடன்.

"ஆம் அவளையும் உன்னையும் சேர்த்து வைப்பதாக வாக்குக் கொடுத்து விட்டே வந்திருக்கிறேன் நான்" என்றான் கண்ணன்.

அதே சமயம் நாங்கள் இருந்த அறையின் கதவைத் திறந்துகொண்டு சகுந்தலா உள்ளே வந்தாள்.

"மூர்த்தி இதோ உன் காதலி வந்து விட்டாள்! ஏற்றுக்கொள்" என்று கூறிய கண்ணன் அவள் கையைப் பிடித்து என் கையில் வைத்தான்.

நாங்கள் இருவரும் நன்றிப் பெருக்குடன் கண்ணனை நோக்கினோம். அவனை, எங்களை வாழ்விக்க வந்த தெய்வமாகவே எண்ணினோம்.

நாட்டியக் கலா மஹாநாடு

இந்திய லளித கலைச் சங்கத்தின் ஆதரவில், இம்மாதம் மூன்றாவது வாரத்தில், சென்னை மியூஸியம் தியேட்டரில், நாட்டியக் கலா மஹாநாடு ஆரம்பமாகி ஒரு வாரம் நடைபெறும். மஹாநாட்டை சென்னை கவர்னர் திறந்து வைக்கிறார். திருப்புகழ்மணி ஸ்ரீ. டி. எம். கிருஷ்ண ஸ்வாமி தலைமை வகிக்கிறார். வழக்கம் போலவே நடனக் கச்சேரிகளும் நடனக்கலை பற்றிய பிரசங்கங்களும் நடைபெறும். இந்தியாவின் பல பாகங்களிலுமுள்ள நடன விற்பன்னர்கள் இதில் கலந்து கொள்ளுவார்கள்.

ஹிந்தி நாடக மண்டலி

தக்ஷிண பாரத ஹிந்துஸ்தானி பிரசார சபையின் மயிலாப்பூர் கிளைக்கு கட்டிடம் கட்ட, நிதி திரட்டவென, சென்ற மாதம் 11ம் தேதி மயிலை ரஸிக ரஞ்சனி சபாவில் ஒற்றுமை (ஹிந்தி) நாடகமும் டாக்டர் சிவராம் (தமிழ்) நாடகமும் நடைபெற்றன. நாடகத்தில் பங்கெடுத்துக் கொண்டவர்கள் அனைவரும் ஹிந்தி நாடக மண்டலியைச் சேர்ந்தவர்கள்.

தீபாவளி மலரில் ''இது நிஜமா!'' பகுதி வெளிவந்திருந்ததைக் குறித்துப் பாராட்டி பல நேயர்கள் கடிதங்கள் எழுதியுள்ளனர். இப் பகுதியை கட்டாயம் தொடர்ச்சியாய் வெளியிடவேண்டும் என்றும் அவர்கள் வற்புறுத்துகின்றனர். ''இது நிஜமா!'' என்று கேட்கக்கூடிய இன்னும் எவ்வளவோ விஷயங்கள் சினிமா உலகில் உள்ளன. அவை இப் பகுதியில் தொடர்ந்து வெளிவரும்.

நாகய்யா நாடகங்களில் பெண் வேஷங்களிலும் நடித்திருக்கிறார்!..
V
VCLASS
15×12=192
18×12=
ஆரம்ப ஆசிரியராக இருந்திருக்கிறார் பி.ஆர். பந்துலு கொஞ்சகாலம்.
பிரமணாள் காப்பி ஹோட்டல்
வாசனைத்திரவிய வியாபாரத்தில் முனைந்துள்ளார் டி.வி. சேதுராமன்
காப்பி ஹோட்டல் மானேஜராக வேலை பார்த்து வந்தார் குளத்து மணி....
POST OFFICE
POST BOX
சினிமா உலகில் பிராவேசிக்கு முன் லேடி பாகவதர்களாக இருந்தார்கள்: எம்.எம். ராதாபாய்- திருச்சூர் டி. பிரேமாவதி.

பாய்ஸ் கம்பெனி நாடகங்களில்
தோழி வேஷங்களில் நடித்திருக்கிறார்
டி. ஆர். ராஜச்சந்திரன்...
தியாகராஜ பாகவதர் முதன் முதலில்
லோகிதாஸனாக மேடை ஏறினார்..
நடிகர் சங்கம் ஆரம்பிக்கும் வரை
தாடி வளர்த்தார் எம். வி. மணி
ஒரு லேடி பாகவதருக்குப் பின்பாட்டு
பாடி வந்தவர் ஸி. வி. வி. பந்துலு..
புளிமூட்டையும் – சாரங்கபாணியும்
வித்வான்களாகப் பிறக்க வேண்டியவர்கள்
தமிழ்ப்பட நடிகைக
ளில் குள்ளமானவர்
ஆர். சிவரத்னம்

வாழப் பிறந்தவள்

[22-ம் பக்கத் தொடர்ச்சி]

இறந்து விட்டாள் என்பதை நான் கேள்விப்பட்டபோது எனக்கு எத்தனை துயரம் ஏற்பட்டது தெரியுமா!)

குளத்திலோ கிணற்றிலோ விழுந்து உயிரை மாய்த்துக்கொள்வது என்றுதான் புறப்பட்டேன். தற்கொலை செய்து கொள்ளத் துணிவது ரொம்பவும் சுலபம். ஆனால் அப்படிச் செய்வதுதான் கடினம். நான் பெண்தானே! எனக்கு அப்போது மனவுறுதி ஏற்படவில்லை. அதற்காக நான் இப்பொழுது வருந்துகிறேன். அன்றே உயிரை விட்டிருந்தால் இன்று நான் ஏன் உலகத்தில் இத்தனை கேவலமாக வாழ்கிறேன்!

சென்னையில் என் தந்தையின் தூரபந்து ஒருவர் இருப்பதாக அடிக்கடி அப்பா சொல்லிக்கொண்டிருப்பார்! அவரிடம் போய் என் நிலையைச் சொல்லி அழுவது என்று தீர்மானித்தேன். ஆனால் ரயிலில் போக பணம் வேண்டுமே? கையில் இரண்டு தங்க வளையல்கள் போட்டுக் கொண்டிருந்தேன். அதைப் பயன் படுத்திக்கொள்வது என்ற தீர்மானத்துடன் ரயில்வே ஸ்டேஷனை அடைந்தேன்.

அது தை மாத ஆரம்பமாகையால், குளிர ஆரம்பித்து விட்டது. அந்தக் குளிரில் புடவையை இழுத்துப் போர்த்திக் கொண்டு ஸ்டேஷனை அடைந்தேன். நான் ஸ்டேஷனை அடைந்த போது ஒரு இளைஞர் என் கண்ணில் பட்டார். ஜரிகை அங்கவஸ்திரமும், வெள்ளை வெளேர் என்ற வேஷ்டி, ஜிப்பாவும், அவரது சிவந்த மேனியும் என் மனதைக் கவர்ந்தன. அவரும் என்னைப் பலமுறை பார்க்க ஆரம்பித்தார். என்னைப் பார்த்தபடி குறுக்கும் நெடுக்கும் பலமுறை நடந்தார். அவர் என்னைப் பார்க்கும்போதெல்லாம் என் உடம்பு 'குப்' 'குப்'பென்று வியர்த்தது! புலி கூண்டிலிருந்து தப்பி சிங்கத்தின் வாயில் சிக்கிக்கொண்ட கதையாக ஆகிவிடுமோ என்று பயந்தேன். ஆனால் அவர் என்மீது உண்மையிலேயே அனுதாபம் கொண்டிருப்பது எனக்கு வெகு சீக்கிரத்தில் தெரிந்துவிட்டது. அவர் என்னை நெருங்கி, "நீங்கள் எங்கே போகிறீர்கள்! இந்த இருட்டு வேளையில் துணையில்லாமல் தனியாகவா வந்திருக்கிறீர்கள்!" என்றார்.

"பட்டணத்திற்குத் தான்......" என்று நாக் குழறச் சொல்லி வைத்தேன்.

"நல்ல வேளை! நானும் அங்கே தான் போகிறேன். நான் உங்களுக்குத் துணையாக இருக்கிறேன்" என்றார் அவர். நான் பதில் பேச முடியாமல் தடுமாறினேன். அதற்குள் வண்டி வந்து விட்டது. எனக்கும் சேர்த்து அவரே டிக்கெட் வாங்கி வந்தார். வண்டியில் ஏகக் கும்பல். அவர் முதலில் ஏறி, என் கையைப் பிடித்து உள்ளே ஏற்றினார்! அவர் கையின் ஸ்பரிசம் ஏற்பட்டவுடன் என் உடம்பு ஒரு முறை குலுங்கியது. நெற்றியிலும் முகத்திலும் வியர்வைத் துளிர்த்தது.

ரயிலில் அவர் என்னிடம் மிகவும் சரளமாகப் பேசினார். அவர் பெயர் ராஜாராமன் என்றும், ஒரு சினிமாக் கம்பெனியில் உதவி டைரெக்டர் வேலை பார்ப்பதாயும், தம் படத்திற்காக ஒரு புதிய நடிகையைத் தேடியே தாம் வந்ததாகவும் அவர் தெரிவித்தார். அவர் ஜாடைமாடையாக என் கரத்தைப் பிடிப்பதும், என்மேல் படுவதுமாகவும் பேசிக்கொண்டிருந்தார். அவருடைய பேச்சு என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டது. ஆகவே என் உள்ளத்தில் குமுறிக் கொண்டிருந்த துயரங்களைச் சொல்லி முகத்தைப் பொத்திக்கொண்டு விம்மி விம்மி அழுதேன். அவர் என் தலையை வருடி, "நீ அழாதே! நான் உன்னைக் காப்பாற்றுகிறேன். உன்னைச் சினிமாவில் சேர்த்து ஒப்பற்ற நக்ஷத்திரமாகச் செய்து விடுகிறேன்" என்றார்.

'சினிமாவில் சேர்த்து விடுகிறேன்' என்று அவர் சொன்னபோது என் உள்ளம் இன்பத்தில் திளைத்தது. நான் சிறுமியாக இருந்த காலத்தில் இரண்டொரு தடவை சினிமாப் பார்த்திருக்கிறேன். அதில் நடிப்பவர்களைப் பார்த்துவிட்டு, 'இப்படி நாமும் நகை நட்டுகளையும், பட்டு ஆடைகளையும் அணிந்து கொண்டு நடிக்க மாட்டோமா? இவர்களைப்போல் என்னையும் புகழ மாட்டார்களா?' என்றெல்லாம் அப்போதே நினைத்ததுஉண்டு. ஆனால் அவைகளெல்லாம் வெறும் வெளிவேஷம் என்பது அப்போது என் புத்தியில் படாமல் போயிற்றே!

ஹிந்திப் பட ரஸிகர்களின் அபி
மான நக்ஷத்திரமான சுரையா
"ஷான்" ஹிந்திப் படத்தில்
இவ்விதம் காட்சியளிக்கிருர்.

134128
சென்னை
NNM, N47
N50.43

"சசீதரன்" புகழ் குமாரி தற்போது டைரெக்டர் ஜானகிராமன் தயாரித்து வரும்–கைலாஸ் பிக்சர்ஸ் புரொடக்ஷன்ஸின்–"சேச்சி" மலையாளப் படத்தின் பிரதம பாகத்தில் நடித்து வருகிறார்.

சென்னையை அடைந்ததும் ராஜாராமன் 'டாக்ஸி' ஒன்றை ஏற்பாடு செய்து என்னை அழைத்துக்கொண்டு போனார். மோட்டார் ஒரு பெரிய பங்களாவின் வாயிலில் வந்து நின்றது. உள்ளே சென்ற பிறகுதான் அது ஒரு பெரிய சினிமாக் கம்பெனி என்று எனக்குத் தெரிய வந்தது. என்னை ஹாலில் இருக்கச் சொல்லி உள்ளே போனார் ராஜாராமன். நடிகைகளும் நடிகர்களும் மேலும் கீழுமாய் நடந்து கொண்டிருந்தார்கள். சிரிப்பும் கொம்மாளமும் எங்கும் தாண்டவமாடின. அவர்களுடைய நாகரிக உடைகளுக்கும் அலங்காரங்களுக்கும் முன்னால் எனக்கு நிற்பதற்கே வெட்கமாக இருந்தது. பருமனை ஒருவர் பின் தொடர, வெளியே வந்தார் ராஜாராமன். அவர் வாயில் இருந்த குழாய் புகையைக் கக்கிக்கொண்டிருந்தது. அவர்தான் டைரெக்டர் என்றும் எனக்குத் தெரிய வந்தது. என்னைப் பார்த்துஅப்படியேஸ்தம்பித்துப்போனார் அவர்! அப்படி அவர் என்னிடம் என்னத்தைக் கண்டு விட்டார்! பிறகு தமக்குப் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த ராஜாராமனிடம் ஆங்கிலத்தில் ஏதோ பேசி விட்டுப் போய்விட்டார். அதற்குப் பிறகு ராஜாராமன் என்னை வேறு ஒரு பெரிய பங்களாவிற்கு அழைத்துக்கொண்டு போய் அதில் எனக்கு ஒரு பெரிய அறையையும் ஒழித்துக் கொடுத்தார். அன்று போஜனம் தேவாமிருதம் போலிருந்தது. சாயங்கிரமே புதுப் பெட்டி ஒன்றும், அதில் நிறையப் பட்டுப் புடவைகளும், சில நகைகளும் வந்துவிட்டன. எனக்குக் கூப்பிட்ட குரலுக்கு ஒரு வேலைக்காரியும் அமர்த்தப் பட்டாள். அன்றெல்லாம் ராஜாராமன் சிரித்துச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார். அவருடைய பேச்சு என் மனப்புண்ணை ஆற்றியது. என் முக வெட்டைக் கண்டு டைரெக்டர் மயங்கி விட்டதாயும், தாம் எடுக்கப்போகும் படத்தில் எனக்கு ஒரு பிரதான பாகத்தைக் கொடுக்கப் போவதாயும் தெரிவித்தார். நான் சந்தோஷத்தில் மூழ்கி எழுந்தேன். அதிர்ஷ்ட தேவதை என்மீது கடைக் கண்ணைத் திருப்பி விட்டதாகவும் எண்ணிப் பூரித்தேன். என்னுடைய சுக வாழ்விற்காகப் பாடுபடும் ராஜாராமனின் மீது எனக்குப் பூரண அன்பு ஏற்பட்டுவிட்டது! அவருடன் பழகப்பழக அது காதலாகமாறிவிட்டது. நான் அவரைப் பூரணமாகக் காதலித்தேன்! எத்தனையோ இரவுகள் அவருடன் நேரம் போவதே தெரியாமல் கழித்திருக்கிறேன்.

பிரிய வனஜா; சினிமா உலகம் பார்ப்பதற்கு ஒரு அழகிய நீரோடையைப் போலல்லவா இருக்கிறது! ஆனால் அதில் எத்தனை முதலைகள், திமிங்கிலங்கள் இருக்கின்றன என்பது வெளியாருக்கு என்ன தெரியும்? இந்த உண்மை, சினிமாவில் நடிக்க ஆரம்பித்த பிறகுதான் எனக்குத் தெரிய வந்தது. எனக்குக் கொடுக்கப்படப் போவதாகச் சொன்ன பிரதான பாகம் ஒரு தாசி வேஷம். வெட்கக்கேடு! அதை நினைத்தாலே நெஞ்சு கலங்குகிறது. சினிமாவில் ஏன் சேர்ந்தோம் என்று ஆகி விட்டது எனக்கு.

பெண்களுக்கு மானம்தானே முக்கியம். அதை இழந்த பிறகு அவர்களுக்கும் மரக்கட்டைக்கும் என்ன வித்தியாசம்! ஐயோ! இந்த ஆடவர்கள்தான் எத்தனை பொல்லாதவர்கள்? அவர்களுடைய காமக் கண்களுக்குத்தான் எத்தனை பேர் இரையாகிறார்கள்? அதில் நான் மட்டும் தப்பிவிட முடியுமா என்ன? கற்பை இழந்தேன்; மானம் இழந்தேன். பலர் முன்னால் டைரெக்டரின் இஷ்டப்படியெல்லாம் கூச்சமின்றி நடிக்கவும் எனக்கு நாளடைவில் தைரியம் ஏற்பட்டுவிட்டது! அதனால் பணம் சேர்ந்தது; புகழ் உயர்ந்தது. சினிமா வானிலேயே இன்று ஒரு சிறந்த நக்ஷத்திரமாகத் திகழ்கின்றேன்.

நான் வாழ்க்கையில் தவறிவிட்டேன்! உண்மைக் காதலுக்கு என் உள்ளத்தில் இடம் இல்லாதபடி சூழ்நிலை ஏற்பட்டு விட்டது! இதையெல்லாம் நானா செய்கிறேன்! என் தலைவிதியல்லவா இப்படியெல்லாம் என்னை ஆட்டி வைக்கிறது! ஆனால் ராஜாராமன்மீது ஏற்பட்ட பாசம் மட்டும் எனக்குக் குறையவில்லை அவர் என்மீது அன்பு வைத்திருந்ததாவது நீடித்ததா?

பெண்களின் கையை நம்பிப் பிழைக்கும் கயவர்கள் இந்த உலகத்தில் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அவர்களின் சோற்றையே தின்றுவிட்டுக் கடைசியில் அவர்களுக்கே துரோகம் செய்யும் பரம சண்டாளர்களும் இந்த உலகத்தில் இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள். ராஜாராமனும் அவர்களில் ஒருவர் என்பது எனக்குப் பிறகுதான் தெரியவந்தது. ஒரு நாள் இரவு நான் தூங்கும்போது ராஜாராமன் என் இரும்புப் பெட்டியைத் திறந்து சுமார் ஐம்பதினாயிரம் ரூபாய் பெறு

மானமுள்ள நகைகளையும் பணத்தையும் எடுத்துக்கொண்டு எங்கோ ஓடிவிட்டார். அப்போதுதான், பணம் சம்பாதிக்கும் நோக்கத்துடனேயே அவர் என்னைச் சுற்றிக்கொண்டிருந்தார் என்பது எனக்குத் தெரியவந்தது. நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. பணம் இன்று வரும்; நாளை போய்விடும். ஆனால் நான் பெண்மையை இழந்துவிட்டேன். இனிமேல் அது திரும்பி வரப்போகிறதா!

சினிமாக்காரிகளின் அந்தரங்க வாழ்க்கையைப்பற்றி மிகவும் கீழ்த்தரமான முறையில் கண்டபடியெல்லாம் எழுதி வயிறு வளர்க்கும் பத்திரிகைகள் பல இன்று வந்திருக்கின்றன. அவைகள் பச்சைப் பாஷையில் எங்களைப்பற்றி எழுதுவதை யெல்லாம் படிக்கும்போது எங்கள் உள்ளங்கள் என்ன பாடுபடுகிறது தெரியுமா! எங்களை அவர்கள் திருத்துகிறார்களா? இல்லவே இல்லை! எங்களைப்பற்றியெல்லாம் தாறுமாறாக எழுதி அதனால் வரும் ஊதியத்தைக்கொண்டு வயிறு வளர்க்கிறார்கள் என் மன நிம்மதிக்காகப் பிரதி தினமும் ஆண்டவனைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கின்றேன். ஆனால் அந்த அமைதி இந்த ஜென்மத்தில் இல்லை. அது மட்டும் நிச்சயம்.

நாங்கள் துக்கப்படுவதற்கு என்றே பிறந்தோம்; துக்கப்படுகிறோம். ஆனால் நீ வாழப் பிறந்தவள்! நீ உண்மையில் சந்தோஷமாய் வாழ வேண்டுமானால் வேறு யோசனை செய்யாமல் பெற்றோரின் சொல்படி ஒருவரை மணந்துகொள். இது உனக்கு மட்டும் எழுதுவதாக எண்ண வேண்டாம் உன்னைப்போன்ற எத்தனையோ குடும்பப் பெண்கள் சினிமாவில் சேரவேண்டும் என்று துடிக்கிறார்கள்! அவர்களுக்கும் இது ஒரு எச்சரிக்கையாக இருக்கட்டும் என்றுதான் இதை பகிரங்கமாகவே எழுதியிருக்கிறேன்.

ஏதோ நான் எழுதிவிட்டேன்! நான் செய்யவேண்டிய கடமையைச் செய்துவிட்டேன். பிறகு உன் இஷ்டம். உனக்கு நான் சொல்லும் புத்திமதிகள் கசப்பாகத்தான் இருக்கும். என்ன செய்வது? மருந்து கசப்பாக இருந்தாலும் உடம்பைக்குணப்படுத்த அதைச் சாப்பிட்டுத்தானே ஆக வேண்டும்.

வனஜா! உனக்குப் பூரண சந்துஷ்டியும் சந்தோஷமும் கூடிய வாழ்க்கையைக் கொடுக்க வேண்டுமென்று ஆண்டவனைப் பிரார்த்தித்துக் கொண்டு இக்கடிதத்தை இத்துடன் முடிக்கிறேன்.

இப்படிக்கு,

அபாக்கியவதி—சியாமளா.

டூரிங் சினிமாக்களுக்கு புதிய கஷ்டங்கள்

டூரிங் சினிமாக்களுக்கு லைசென்ஸ் கொடுப்பது சம்பந்தமாக தங்களால் ஏற்கனவே 5-5-50ல் பிறப்பிக்கப்பட்ட விதிகளில் சிலவற்றை விளக்கியும், மேற்கொண்டு சில புதிய விதிகளைப் பிறப்பித்தும் சென்னை சர்க்கார் பின்கண்ட அறிக்கையை வெளியிட்டிருக்கின்றனர்.

ஐம்பதினாயிரம் பேர்களுக்கு மேற்பட்டவர்கள் வசிக்கும் நகரங்களில் நிரந்தரமான சினிமாக்கள் இல்லாவிட்டாலும் அவ்விடத்திற்கு மூன்று மைல்களுக்குட்பட்ட எந்த இடத்திலும் டூரிங் சினிமாவுக்கு அனுமதி அளிக்கக் கூடாது. அம்மாதிரியான இடங்களில் நிரந்தரமான தியேட்டர் ஏற்படுவதற்கு ஆக்கமளிக்க வேண்டும் என்ற சர்க்காரின் நோக்கமே இதற்குக் காரணமாகும்.

ஐம்பதினாயிரம் பேருக்குமேல் வசிக்கும் நகரை அடுத்துள்ள கிராமத்திலோ, முனிசிபல் அல்லது பஞ்சாயத்து பிரதேசத்திலோ, அந்த நகரின் நிரந்தர சினிமாவுக்கு மூன்று மைலுக்குட்பட்ட இடத்திற்குள் எந்த டூரிங் சினிமாவையும் அனுமதிக்கக் கூடாது. ஐயாயிரம் பேரோ அல்லது அதற்குக் குறைவாகவோ உள்ள இடங்களில் நிரந்தர சினிமாக்களைக் கட்டுவதற்கு ஆக்கமளிக்கவே சர்க்காரது உத்தேசமாதலால், ஏற்கெனவே நிர்ணயித்த தொகைக்குமேல் டூரிங் சினிமாக்களுக்கு அனுமதி அளிக்கப் படமாட்டாது.

ஒரு இடத்தின் ஜனத் தொகையை, ரேஷன் புள்ளிக் கணக்குகளைக் கொண்டு அல்லது 1941ம் வருஷ ஜன கணிதப்படி உள்ள தொகையை வருஷத்திற்கு ஒரு சதவிகிதம் அதிகமாக்கிக் கொண்டு நிர்ணயம் செய்யவேண்டும்.

மந்திரியிடம் முறையீடு

தென்னிந்திய டூரிங் சினிமாக்காரர்கள் சங்கத்தின் தலைவரான ஸ்ரீ. கே. சுப்ரமண்யம், இந்த உத்தரவுகளினால் டூரிங் சினிமா நசித்து விடுமென்பதை விபரமாக எடுத்துக்கூறி, சினிமா விசாரணைக் கமிட்டியின் முடிவு தெரியும் வரையில் இந்த உத்தரவுகளை அமுல் நடத்த வேண்டாமென்று கேட்டு ஒரு வேண்டுகோளை விடுத்து, சம்பந்தப்பட்ட மந்திரிக்கு ஒரு கடிதத்தையும் எழுதியிருக்கிறார்.

இனாம்

எமது நெ. 501 கருப்பு மயிர் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லாவிதமான மயிரும் மைக் கருப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கருப்பாக வளரும். இது மயிர்கள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும், சுருண்டதாகவும், வளரச் செய்கிறது. புட்டி ஒன்று விலை ரூ. 2—4—0; 3 புட்டிகள் (பூரா முறை) ரூ. 5—15—0.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி ரிஸ்ட் வாட்சும்; மோதிரமும் (நியூ கோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும், உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்திரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூ கோல்டு மோதிரங்களும் இனாம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

AMRIT PHARMACY (G. M.)
JULLUNDUR CITY.

நக்ஷத்திரம் பிறந்த நாள்

சென்ற மாதம் (மலரில்) "நக்ஷத்திரம் பிறந்த நாள்" பகுதி ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் பகுதியை நாம் எதிர்பார்த்தது போலவே நேயர்களும் மிக விரும்புகிறார்கள். அதுமட்டுமல்ல ; நக்ஷத்திரங்களின் பிறந்த தேதிகளை வெளியிடுவதோடு அவர்களது ஜாதக பலன்களையும் வெளியிடும்படிக் கேட்கிறார்கள். அதற்கும் ஏற்பாடு செய்து வருகிறேன். நானென்னவோ நிச்சயம் ஜோஸ்யனல்ல. ஆதலால் நக்ஷத்திரங்களைப் பற்றி பிரத்தியக்ஷமாய் தெரிந்த பலன்களை மட்டும் இங்கு எழுதுகிறேன்.

டிஸம்பர் மாதம் பிறந்த நக்ஷத்திரங்களில் முக்கியமானவர்கள் பத்மினி, டி. பாலசுப்ரமண்யம், பி. எஸ். ஸ்ரீநிவாஸ ராவ் ஆகியோர். இம்மூவரும் ஏராளமான படங்களில் நடித்திருப்பதை டிஸம்பர் மாதத்திற்குரிய விசேஷ அம்சமாகக் கொள்ளலாம்.

—ஆசிரியர்.

★

சினிமா வானில் எவ்வளவோ நடன நக்ஷத்திரங்கள் தோன்றியுள்ளனர். ஆனால் திருவாங்கூர் சகோதரிகள் நான் அதிகமான படங்களில் ஆடியுள்ளனர்; ரஸிகர்களின் ஆதரவையும் அதிகமாய் பெற்றுள்ளனர். இந்த சகோதரிகள் முதன் முதலில் "கன்னிகா"வில் ஆடத் தொடங்கி அநேக படங்களில் ஆடியுள்ளனர்; "ஏழை படும் பாடு!" படத்தில் பாத்திரமேற்று நடிப்பதையும் பார்க்கலாம். இந்த சகோதரிகளில் இளையவரான பத்மினிக்கு இம்மாதம் 25ந்தேதி யன்று 18வது வயது பிறக்கிறது.



இம் மாதம் 46வது வயதைத் தொடங்கும் டி. பாலசுப்ரமண்யம் தம் வாழ்க்கையின் ஆரம்பத்தில் விவரிக்க முடியாத பல கஷ்டங்களை அனுபவித்து, கடைசியில் எதிர்பாராவிதமாய் சினிமா நடிகரானார். இதுவரையில் சுமார் இருபது படங்களில் நடித்திருக்கும் 'பாலு' கடைசியாக "திகம்பர சாமியாரி"ல் சட்டைநாத பிள்ளையாக நடித்து, தாம் ஒரு நல்ல குணசித்திர நடிகர் என்பதை நிரூபித்திருக்கிறார். 'பாலு'வை மனதில் கொண்டே வடுவூரார் இப் பாத்திரத்தை சிருஷ்டித்தாரோ என்று கூட நமக்குத் தோன்றும்படி அவ்வளவு கனகச்சிதமாய் இருக்கிறது அவரது வேஷமும், நடிப்பும். 'பாலு'வுக்கு நம் பட முதலாளிகள் இதுமாதிரி வேஷங்களை நிறையக் கொடுக்க வேண்டும்.



மௌனப் பட காலத்தில் "அகில இந்திய நடிகர்" என்ற புகழைப் பெற்றார் பிரபல (தமிழர்) ராஜா சாண்டோ. பேசும் பட யுகத்தில் இந்தப் புகழைக் கைப்பற்றிக் கொண்டவர் தமிழ்ப் பட நடிகர் பி. எஸ் ஸ்ரீநிவாஸ ராவ். அவர் ஒரு பி. ஏ. பட்டதாரி. புராணப் படங்களைவிட சமூகப் படங்களுக்கே அவரது தோற்றம் பொருத்தமானது. தமிழில் சமூகப் படங்கள் அதிகம் வெளிவராததால் அவர் 'ஸ்டன்ட்' படங்களில் நடிக்கலானார். அவைகளுக்கும் 'மௌஸ்' இல்லாமற் போகவே தற்போது ஹிந்திப் படங்களில் நடித்து வருகிறார். அவரை மீண்டும் தமிழ்ப்பட உலகிற்குக் கொண்டுவருவது நமக்கு கௌரவமாயிருக்கும். ராவ் நடித்த கடைசித் தமிழ்ப் படம் "ஜீவஜோதி" ஆகும்.

இது செய்தி

"வனமாலா"

பெயரைப் பார்க்கும் பொழுதே வன (காடு) சம்பந்தமான ஒரு படம் என்று தெரிகிறது. வி. அண்டு ஸி ப்ரொடக்ஷன் ஸார் **வனமாலா** என்ற கதையை மலையாளம், தமிழ் இரு பாஷைகளிலும் படமாக்கும் வேலையில் முனைந்திருக்கிறார்களாம். படங்களை ஜி. விஸ்வநாதன் டைரெக்ட் செய்கிறாராம்.

கூட்டுறவு பிலிம் கம்பெனி

கோவையில் சமீப காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட "கோ-ஆர்டினேட்டட் ஸினி ப்ரொடக்ஷன்ஸ்" என்ற படக் கம்பெனியின் முன்னேற்றம் சம்பந்தமான அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார்கள். ஆர்வமும் ஆற்றலுமுள்ள புதிய முகங்களை அறிமுகப்படுத்துவதே இக்கம்பெனியின் நோக்கமாம். பொது ஜனத்தையே தன் மூலதனமாகக் கொண்டு உழைக்குமாம் இந்த ஸ்தாபனம். இந்த ஸ்தாபனத்தின் படங்களில் கதாநாயகன் முதல் எக்ஸ்ட்ரா வரை எல்லோருமே புத்தம் புதிய நடிகர்களாக இருப்பார்களாம். **முயற்சி** என்ற தமிழ்ப் படம், **சுருதி** என்ற மலையாளப் படம் இவைகள் சம்பந்தமான வெளிப்புறக் காட்சிகளைத் தயாரிக்க இம் மாதம் 2வது வாரத்தில் அவர்கள் மலையாளம் போவார்களாம்.

அ. ரி. பிலிம் கார்ப்பரேஷன்

இக்கம்பெனியார் சென்னை நகரிலும், தமிழ் நாட்டிலும் சில ஹிந்திப் படங்களை விநியோகிக்கும் உரிமைகளைப் பெற்றிருக்கிறார்கள். பிரபல நடிகை நர்கீஸ் நடித்த **ஏகிராந்** தமிழ் நாட்டில் பல இடங்களில் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. மற்றும் இவர்களுடைய வெளியீடுகளாக சீக்கிரமே **அவாரா, ஷான், ஏக் நஸார், அரம்** முதலிய படங்கள் சென்னையிலும் தமிழ் நாட்டிலும் திரையிடப்படவிருக்கிறது. இது தவிர பிரம்மாண்டமான முறையில் வர்ணப் படமாகத் தயாராகி வரும் மெஹ்பூப்பின் **ஆன்** என்ற படத்தைக்கூட சென்னையிலும் தமிழ் நாட்டிலும் இவர்கள்தான் திரையிடப் போகிறார்கள். இந்த ஆன் படம் தமிழாகவும் ஆக்கப்பட்டு வரும் விஷயம் நேயர்களுக்குத் தெரிந்ததே.

"தாய்"

ஜெமினி ஸ்டுடியோவினர் **தாய்** என்ற படத்தைத் தயாரிக்க திட்டமிட்டு முயற்சிகள் எடுத்து வருகிறார்கள். இப்பொழுது அதே பெயரில் மற்றொரு படம் வெளி வருமென ஒரு அறிவிப்புத் தெரிவிக்கிறது. ரேவதி ப்ரொடக்ஷன்ஸ், உமா பிலிம்ஸ் என்ற இரு கம்பெனிகளின் கூட்டுத் தயாரிப்பாக இப் படம் தமிழ், தெலுங்கு ஆகிய இரு பாஷைகளில் தயாரிக்கப்படுமென ஒரு அறிவிப்பு விளம்பரம் வெளியாகியிருக்கிறது.

"நடிகை"

கைலாஸ் பிக்சர்ஸார், சேலம் ரத்னா ஸ்டுடியோவில் ஒரு புரட்சிகரமான சமூகக் கதையை **சேச்சி** என்ற மலையாளப் படமாகவும், **நடிகை** என்ற தமிழ்ப் படமாகவும் தயாரித்து வருகிறார்கள். தனது தங்கைக்காகத் தன் எல்லா உடமைகளையும் தியாகம் செய்த ஒரு பெண் மணியின் கதையாம் இது. **சசிதரன்** என்ற வெற்றிகரமான மலையாளப் படத்தைத் தயாரித்து வெளியிட்ட டி. ஜானகிராமன்தான் இந்த இரு படங்களையும் டைரெக்ட் செய்கிறார். படத்தில் அனுபவமுள்ள பல நடிகர், நடிகைகள் நடிக்கிறார்களாம். வைக்கம் சரஸ்வதியின் சகோதரனும், பாடகனும், கஞ்சிரா வித்துவானுமான வி. என். ராஜன் இப்படத்திற்கு சங்கீத டைரெக்டராம்.

பத்திரிகைக் காட்சிகள்

சென்ற மாதம் 7ம் தேதி ஜெமினியின் **நிஷான்** பத்திரிகைக் காட்சி நடைபெற்றது. ஜெமினி ஸ்டுடியோவின் அழகிய தியேட்டரில் நடைபெற்ற இக்காட்

சிக்கு பத்திரிகாசிரியர்களை மட்டுமே அழைத்திருந்தது குறிப்பிடத் தக்கது.

லாவண்யா பிக்சர்ஸின் மானேஜிங் டைரெக்டர் எஸ். கே சுந்தரராமன் தங்களது கன்னி முயற்சியான பாரிஜாதம் படத்தைப் பத்திரிகைக்காரர்களை அழைத்துக் காட்டினர். சென்ற மாதம் 8ம் தேதி சென்னை நியூ குளோப்பில் நடைபெற்ற இந்தக் காட்சிக்கு மந்திரி கனம் எம். பக்தவத்ஸலம் தலைமை வகித்தார்.

ஸ்ரீ. நாராயண அய்யங்கார் 13ம் தேதியன்று ஆடம்பரமில்லாமல் பத்திரிகாசிரியர்களை அழைத்து, காஸினோ தியேட்டரில் ஏழை படும் பாட்டை அவர்களுக்குத் திரையிட்டுக் காட்டினர்.

23ம் தேதி செளத்ரி பில்ம்ஸார் தங்கள் ஷபர் என்ற ஹிந்திப் படத்தின் பத்திரிகைக் காட்சியை ஸாகரில் நடத்தினர்கள்.

கண்காட்சி

சென்னையில் வருஷா வருஷம் டிஸம்பர் மாதத்தில் ஆரம்பமாகி நடக்கும் காங்கிரஸ் சுதேசி பொருட் காட்சி இவ் வருஷம் கிடையாது. அதற்காக ரஸிகர்கள் ஏமாற்றமடைய வேண்டியதில்லை. சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. மைதானத்தில் 'பார்க்பேர் கண்காட்சி' முந்திய வருஷங்களைவிட சிறந்த முறையில் நடைபெற ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. பிரத்தியேகமாக அமைக்கப்பெறும் 'கலா மண்டபத்தில் சிறந்த நாடகங்களும், நடனங்களும் நடைபெற ஏற்பாடு செய்யப் போகிறார்களாம்.

அ. இ. பத்திரிகைக் காட்சி

அகில இந்தியப் பத்திரிகாசிரியர்கள் மஹாநாட்டின் சார்பில் இம்மாதம் 2ம் தேதி டில்லியில் நடைபெறவிருந்த அகில இந்தியப் பத்திரிகைக் காட்சி அடுத்த வருஷம் மார்ச் மாதம் முதல் வாரத்தில் நடைபெறுமாம்.

ராஷ்டிரபதியின் உபதேசம்

சென்ற மாதம் டில்லியில் காலேஜ் மாணவர்கள் கூட்டம் ஒன்றில் பேசுகையில் ராஷ்டிரபதி தாண்டன்ஜி மாணவர்கள் சினிமாப் பார்ப்பதைக் கண்டித்திருக்கிறார். "நம் நாட்டில் தயாராகும் படங்களைப் பார்ப்பதால், மாணவர்களின் கல்வி அறிவு வளர்ச்சி அடைவதற்குப் பதில், பல வழிகளிலும் கெட்டுப்போக ஏதுவாக இருக்கிறது. ஆகவே

மாணவர்கள் படம் பார்ப்பது கூடாது" என்று கூறியிருக்கிறார் அவர்.

பம்பாய்த் தமிழ்ச் சங்கம்

பம்பாய்த் தமிழ்ச் சங்க அங்கத்தினர்கள் சென்ற மாதம் 4ம் தேதி முதல் 8ம் தேதி முடிய ஐந்து நாட்கள் அஜந்தா—எல்லோரோ கலைச் செல்வங்களைப் பார்வையிட உல்லாஸ யாத்திரைபோய் வந்தார்களாம். 19ம் தேதி "கம்பதாஸன்" தலைமையில் வ. வு. சி. தினத்தைக் கொண்டாடினார்களாம்.

மந்திரி பேசினார்

சென்னை சினிமா ரஸிகர்கள் சங்கத்தின் சார்பில் சென்ற மாதம் 24ம் தேதி ஒய். எம். ஸி. ஏ. ஹாலில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. அன்று, சென்னை கல்வி மந்திரி கனம் மாதவ மேனன், "சர்க்காரும் சினிமாவும்" என்பதுபற்றிப் பேசினார். இச்சங்கத்தின் உபதலைவர் ஸ்ரீ. ஏ. அருணாசலம் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

கனம் மந்திரி பேசுகையில், தியேட்டர்களில் புகை பிடிப்பவர்கள் மீது நேரடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள ஒரு சட்டம் இயற்றுவதுபற்றி சர்க்கார் யோசித்து வருவதாகவும், நிரந்தரமான தியேட்டர்கள் எத்தனை கட்டவேண்டுமோ அத்தனை கட்டுவதை ஆதரிப்பது தான் சர்க்கார் கொள்கையென்றும், சினிமாப் பார்ப்பவர்களின் சௌகரியத்திற்கு அது அத்யாவசியம் என்றும் குறிப்பிட்டார். மேலும் அவர் பேசுகையில், 'நீண்ட படங்கள் வேண்டும்' என்று கேட்கும் படத் தயாரிப்பாளர்களைக் குறை கூறுவதற்கில்லை எனவும், அவர்கள் கட்சியில் நியாயம் இருப்பதாகவும் அவைகள் இப்பொழுது இருப்பது போலவே இருக்கட்டுமென்றும், தாம் குறுக்கிட விரும்பவில்லையென்றும் சொன்னார். கடைசியாக அவர், பொழுதுபோக்கு, தமாஷா விஷயங்களில் சர்க்கார் குறுக்கிடக் கூடாது என்பதே தம்முடைய அபிப்பிராயம் என்றும் தெரிவித்தார்.

நவம்பர் மாத சபா நிகழ்ச்சிகள்

மயிலை—ரஸிக ரஞ்சனி சபாவின் ஆதரவில் 18-ம் தேதியும், 19-ம் தேதியும் ஆனந்த விகடன் 'தேவன்' எழுதிய "துப்பறியும் சாம்பு" நாடகம் நடந்தது. நாடகம் திருவல்லிக்கேணி பைன் ஆர்ட்ஸ் சொஸைடியினரால் நடிக்கப்பட்டது. இரு தினங்களிலும் நாடகத்திற்கு மிகவும் நல்ல ஆதரவு. நாடகத்தின் ஒவ்வொரு காட்சியையும் ஜனங்கள் வெகுவாக ரஸித்தார்கள். சம்பவங்களும் சம்பாஷணைகளும் ஹாஸ்யமாக இருந்ததுடன் நடிகர்களின் நடிப்பும் நாடகத்தின் வெற்றிக்குப் பெரிதும் உதவியாக இருந்தது. 19ம் தேதிய நாடகத்திற்கு நாடகாசிரியர்கள் சிலரும், படவுலகப் பிரமுகர்கள் சிலரும் வந்திருந்தார்கள்.

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி சபாவின் ஆதரவில் 25ம் தேதி ஸ்ரீமதி தனம் அம்மாளின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது. பாடகி, ஸ்ரீ. ராமானுஜ அய்யங்காரின் சிஷ்யை ஆவார். அன்று பக்க வாத்தியமாக கண்டதேவி அளகிரிசாமி பிடிலும், தஞ்சாவூர் ராமமூர்த்தி மிருதங்கமும் வாசித்தார்கள்.

தாம்பரம் சங்கீத சபாவின் ஆதரவில் 12ம் தேதி டி. சூர்ய குமாரியின் இன்னிசைக் கச்சேரி தக்க பக்க வாத்யங்களுடன் நடைபெற்றது.

12ம் தேதி ரஸிக ரஞ்சனி சபாவின் ஆதரவில் மஹாராஜபுரம் விஸ்வநாத அய்யரின் கச்சேரி நடைபெற்றது.

வெளிவந்துவிட்டது!

1. வைஜயந்தி 0—2—0

2. பொல்லாத செல்லப்பா 0—2—0

தபாலில் வேண்டுவோர் 0-4-9 ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

ஏஜண்டுகளுக்கு 25 பர்ஸன்ட் கமிஷன் கொடுக்கப்படும். வேண்டிய பிரதிகளுக்கு 25 பர்ஸன்ட் கமிஷன் கழித்து முன் பணம் அனுப்பும் ஏஜண்டுகளுக்குத் தான் பிரதிகள் அனுப்பப்படும்.

—: விபரங்களுக்கு :—

டம்டம் பதிப்பகம்,
57, அரண்மனைக்காரத் தெரு,
சென்னை—1.

வெளிவந்து விட்டது!

ஓவியத்திற் கொத்ததோர் காவியஞ் செய்த பாவைமணி ஆண்டாள அருளிய

திருப்பாவை

இது முப்பது பாடல்கள் கொண்ட அரிய நூல். இதனுடன் திருப்பல்லாண்டு, திருப்பள்ளி எழுச்சி, கண்ணிநுண் சிறுத்தாம்பு, வாரணமாயிரம் முதலியவை களும் அடங்கியுள்ளன.

இவற்றிறகு எளிய தமிழில, பலரும் எளிதில புரிந்து கொளளும வகையில பதவுரை, கருததுரை, விசேஷார்த்தம் முதலயன "ஆயனுல்" எழுதப்பட்டது. அட்டைப் படம—மூவர்ணததில் ஸ்ரீ ஆண்டாள் மிக பொலிவோடு விளங்கிருள.

விலை ரூ. 1—0—0

வேண்டுவோர் இலநே எழுதி V. P. P. யில பெறலாம்.

ஸ்ரீ பொன்னி நூல் நிலயம்,
43, பாளையப்பன் தெரு,
ஏழுகிணறு, சென்னை—1.

விரைவில் வருகிறது!

பிரபல சினிமா நக்ஷத்திரம்

வைஜயந்திமாலா

வாழ்க்கை வர்ணனை

இதுவரையில் அவர் வாழ்க்கையில் நடந்த பல சுவாரஸ்யமான சம்பவங்கள் நிறைந்த புத்தகம். ஏராளமான போட்டோக்களுடன் வெளிவருகிறது.

இன்றே உங்கள் பிரதிக்கு முந்திக்கொள்ளுங்கள்

அழகான நான்கு வர்ண அட்டை.

விலை 8 அணா

தபாலில் வேண்டுவோர் 9 அணா ஸ்டாம்பு அனுப்பவும். ஏஜெண்டுகளுக்கு 25% கமிஷன்.

தேவையான பிரதிகளுக்கு 25% கமிஷன் கழித்து முன்பணம் அனுப்பும் ஏஜெண்டுகளுக்கே பிரதிகள் சப்ளை செய்யப்படும்.

விபரங்களுக்கு:

வெண்ணிலா வெளியீடு
118, பிராட்வே
தபால் பெட்டி 1749 சென்னை-1

நடனம் ஆடினர்

"நந்தி"

பாவங்களாலும் ஏற்ற ஆங்கிகத்தாலும், வேறு பொருள்களின் உதவியின்றியே சபையோருக்கு எந்தச் செயலையும் சுலபமாக அறிவுறுத்தக் கூடிய (நாட்யதர்மீ) வகையை நாட்டியங்களில் பின்பற்றுவது நல்லது. சில சாதாரண செய்கைகளை விளக்கவும், உபகரணங்களை மேடையில் உபயோகிப்பது(லோகதர்மீ) நாட்டியத்திற்கு அவ்வளவாக உகந்ததல்ல. கடந்த மாதம் 5ம் தேதியன்று செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் நடைபெற்ற வைஜயந்திமாலா கோஷ்டியின் சிற்றம்பலக் குறவஞ்சி நாட்டிய(நாடக)த்தில் "கருணை நீ செய்ய" என்ற வர்ணத்தின் ஆரம்பத்தில், பாட்டரி விளக்குடன் மேடைமீது தோன்றி தெய்வத்திற்கு தீபாராதனை செய்வதைப்போல் காட்டிய (லோகதர்மீ) முறை, நாட்டியத்திலிருந்து நழுவி நிற்கும் நாடகக் காட்சியைப் போன்றே காணப்பட்டது. இதற்கு முந்திய குறவஞ்சி கச்சேரிகளில் வெறும் பாவங்களாலேயே ஆராதனையை அறிவுறுத்திய "நாட்யதர்மீ" முறையை விட, பாட்டரி விளக்கு அதிக ரஸனையை உண்டாக்கிவிடவில்லை.

வஸந்தவல்லியாக வைஜயந்திமாலாவும், ஈஸ்வரன், குறத்தி, இரு பாகங்களை டி. ஆர். நவநீதமும் தாங்கி நடித்தனர். வஸந்தவல்லியின் பாட்டுகள் சிலவற்றிலுள்ள சொற்கட்டுகளுக்கு ஜதிகள் நன்ருக அமைக்கப்பட்டிருந்தும், ஆடியதில் ஆங்கிக சுத்தம் தவறிக் காணப்பட்டது. "எப்போ வருவாரோ!" என்ற உணர்ச்சி மிகுந்த பாட்டிற்கு அபிநயம், பூரண திருப்திகரமாய் அமையவில்லை. தலைவி தூங்குவதாக காட்டியபோது, வெளிச்சம், மங்கிக்கொண்டே வருவதைப்போல்அமைத்திருந்தது அழகாகவே காணப்பட்டது. நாட்டியத்தில் 'நித்திரை' என்னும் சஞ்சரி பாவத்திற்கேற்ற அநுபாவம், தூங்குவதைக் குறிக்கக்கூடிய நிலை முதலியவற்றை அநுசரித்து, அத்துடன் வெளிச்சத்தையும் குறைந்துக் கொண்டே வருவதைப்போல் அமைத்திருந்தால் சாஸ்திரீய சுத்தத்துடன் போற்றத்தக்க வகையில் அமைந்திருக்கும். "கனவில் கண்டேன்" என்ற பாட்டுக்கு அபிநயம் மற்றவைகளைவிட அழகாயிருந்தது. வஸந்தவல்லி, தில்லை செல்வதற்காக தோழியர்களிடம் விடைபெற்று நிற்கும் உன்னதமான உணர்ச்சிகள் நிறம்பிய காட்சியில், வைஜயந்திமாலாவின் நடிப்பு சாதாரணமாகவே இருந்தது.

குறத்தியாகநடித்த டி. ஆர். நவநீதத்திடம் ஆங்கிகம் சுத்தமாக இருந்தும் போதிய அளவுக்கு ரஸிக்கவில்லை.போதிய தெளிவுகளை, கையாளாதது இந்த குறைக்குக் காரணமாக இருக்கக்கூடும். "சொல்லுவேன்—குறி சொல்லுவேன்!" என்ற பாட்டுக்கு அபிநயம் நன்ருய் இருந்தது.

சினிமா நடிகர்

நீங்கள் ஒரு சினிமா நடிகராகவோ அல்லது நடிகையாகவோ ஆகி, மாதத்திற்கு ரூ. 100 முதல் ரூ. 1500 வரையில் சம்பாதிக்க விரும்பினல் எங்களுக்கு எழுதவும்.

உங்களுக்கு படிப்பு அதிக மில்லாவிட்டாலும், பாடத் தெரியாவிட்டாலும், நடனம் ஆடத் தெரியாவிட்டாலும் பரவாயில்லை.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்

Director,

BOMBAY FILM SERVICE (G.M.)

Box No. 5, JULLUNDUR CITY.

357 PERSONS are awarded prizes in our competition No.39 (1-st prize 317, IInd prize 5, IIIrd prize 30 and IVth prize 5) Full particulars are published in the RAINBOW dated 10—12—50.

ரூபாய் 25,000 பரிசு

ரிஜிஸ்டர் நெ. 249. போட்டி நெ. 41

M/S. Premier Bank of India Ltd-ல் சீல் செய்துவைக்கப்பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின் பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர்களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்றும் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியான விடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000/. முதல் இரண்டு நம்பர்கள் சரியானவிடைக்கு 5-ம் பரிசு ரூ. 1,000-ம் அளிக்கப்படும். எங்கள் ஸீல் வைத்த விடைகள்படி எல்லாம் சரியாக இருக்க வேண்டும்.

RAINBOW COMPETITIONS

KEY S. NO. 39 *50 to 65=230

63	56	60	51
50	61	57	62
53	58	54	65
64	55	59	52

We hereby certify that the above is the solution in original deposited with us by Rainbow Competitions No. 39 on 30-X-50 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

For The Premier Bank of India Ltd.

V. Ramanathan 28-11-50
Agent, Madras

முடிவு தேதி 27—12—50. விடை 12—1—51.

பிரவேசக் கட்டணம்: கூபன் 1-க்கு ரூ. 1—0—0. 6 கூபன் கொண்ட ஷீட் 1-க்கு ரூ. 5—0—0

238

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்;—52 முதல் 67 வரையுள்ள எண்களைக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில், மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், குறுக்காகவும்; எப்படிக் கூட்டினாலும் 238 வரும்படியாக அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒரே தட்வைதான் உபயோகிக்க வேண்டும். **விதிகள்**:—தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்டத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்பட வேண்டும். பிரவேசக் கட்டணத்தை கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்ட்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்ட்டர் செய்த ரசீதை கூபன்களுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். வசூலுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது; சட்டபூர்வமாய்க் கட்டுப்படுவதுமாகும். போட்டி முடிவு RAINBOW மாதமிருமுறை பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். அல்லது 4 அணா ஸ்டாம்பு அனுப்பினால் விடை அனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்ப வேண்டிய விலாசம்:—

THE RAINBOW COMPETITIONS No.41, 306 (21) Mint Street, MADRAS-1.

ரிஜிஸ்டர் நெ. 249. **ரூபாய் 25,000 பரிசு** போட்டி நெ. 42

சரியான விடை Premier Bank of India Ltd., Madras-ல் சீல் செய்து வைக்கப்பட்டுள்ளது. (மற்றவை மேலே கூறப்பட்டுள்ளது போல்). முடிவு தேதி 12-1-51. விடை:27-1-51.

பிரவேசக்கட்டணம் கூபன் 1-க்கு ரூ.1/- 6 கூபன் கொண்ட ஷீட் 1-க்கு ரூ. 5/-

262

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:—58 முதல் 73 வரையுள்ள எண்களை கொடுக்கப்பட்டுள்ள கட்டங்களில் எப்படிக் கூட்டினாலும் 262 வரும்படி அமைக்கவேண்டும். ஒரு எண்ணை ஒரே தட்வைதான் உபயோகிக்க வேண்டும். மற்ற விபரங்கள் மேற்கூறியதுபோல்.

The Rainbow Competitions, No. 42,

306. (21) Mint Street, Madras—1.

"எங்கள் நாடு, மலைநாடு" என்ற பாட்டுக்கு பாவங்கள் திருப்திகரமாக காணப்படவில்லை. ஈஸ்வரன் பாகத்தில், நவநீகம் நன்றாகவே நடித்தார்.

ஹிந்தி மெட்டுகளில் அழகாகப்பாடும் திறமை பெற்ற லக்ஷ்மி, இந்தக் கச்சேரிக்கு பதம் பாடினர். அநேக பாட்டுகள் நன்ருக பாடப் பெறவில்லை. சிற்றம்பலக் குறவஞ்சியைவிட, நிகழ்ச்சியின் கடைசி காட்சியாகிய "வாழ்க்கை"யின் "டடடா" பாட்டுக்கு அபிநயம் ரஸிகர்களுக்கு விருந்தாக இருந்தது.

கோகலே மண்டபத்தில் 19ம் தேதியன்று இந்தியன் பைன் ஆர்ட்ஸ் ஸொஸைடியினர், குமாரிகள் வஸந்தா, சுலோசன இவர்களின் நடனக் கச்சேரிக்கு ஏற்பாடு செய்திருந்தனர். நிகழ்ச்சியில்இடம் பெற்றிருந்த ஹிந்திப் பாட்டுகளுக்கு அபிநயம் குறிப்பிடத் தக்கவாறு அமையவில்லை. "யாதவாள்", "காத்தாடி பறக்க விடுதல்" போன்ற சில சிறு சாதாரண சம்பவங்களை (நாட்டிய) நாடகப் பாணியில் ஆடினர். இவைகளிலும், உயரிய சாத்விகமோ ஆஹார்யமோ காணப்படவில்லை. பக்க வாத்தியக்காரர்களின் "வாசிகம்" சுமாராக இருந்தது. இந்த கதம்பங்களுக்குப்பின் ஆடிய "தில்லானு" சற்று கலை மணத்துடன் விளங்கிற்று.

குமாரி வஸந்தாவிடம், ஆங்கிகமும் குமாரி சுலோசனவிடம், சாத்விகமும், போதிய அளவுக்குக் காணப்பட்டன. பலரகமான பாட்டுகளை அமைத்து, "பரத நாட்டியம்" என்ற பெயருடன் நடத்திய இந்த புதுமுயற்சி கலைக் கண்களுக்கு விருந்தாக அமையவில்லை. நட்டுவனர் வீரவாகு ஓதுவா மூர்த்தி அன்றைய கச்சேரிக்கு நட்டுவாங்கம் செய்தார்.

அரங்கேற்றம்

சென்ற மாதம் 19-ம் தேதி, செங்கற்பட்டு திருமலை டாக்கீஸில் குமாரி ஏ. ஸி. கோமளாவின் பரத நாட்டிய அரங்கேற்று விழா செங்கற்பட்டு ஜில்லா ஜட்ஜ் ஸ்ரீ. பி. என். ராமஸ்வாமி தலைமையிலும், ஆதரவிலும் நடைபெற்றது. சென்னை ராயப்பேட்டை சர்க்கார் ஆஸ்பத்திரி ஹானரரி சர்ஜன் டாக்டர் ஏ. எஸ். சுந்தரராஜனின் குமாரியான இவர், செய்யூர் ஆர். திருவேங்கட நட்டுவனரின் சிஷ்யை ஆவார்.

ராஜலக்ஷ்மியின் நடனம்

சென்ற மாதம் 11ம் தேதி ஒரு உதவி நிதிக்காக டி. எஸ். ராஜலக்ஷ்மியின் நாட்டியக் கச்சேரி, சௌந்தர்ய மஹாலில் நடந்தது. அன்று அவருடைய ஆட்டம் பலவகையில் சிறப்பாக இருந்தது.

பி. எஸ். சரோஜாவின் 22வது பிறந்த நாளை சென்னை சினிமா ரஸிகர்கள் சங்கத்தினர் கொண்டாடியபோது எடுக்கப்பட்ட படம். (வலமிருந்து) சென்னை மராமத்து இலாகா காரியதரிசி—லோபோ பிரபு, உபதலைவர் ஏ. அருணசலம், சரோஜா...

உன்னத முறையில் தயாராகி வருகிறது!

1951-ம் வருஷத்திய

குண்டூசி காலண்டர்

பானுமதி, வைஜயந்திமாலா, மாதுரி தேவி, எஸ். வரலக்ஷ்மி, லலிதா - பத்மினி, சூர்ய பிரபா ஆகிய பிரபல சினிமா நக்ஷத்திரங்களின் ஜ்வலிப்புமிக்க மூவர்ணப் படங்களுடன்.

விலை 12 அணா.

தபால் மூலம் பெற விரும்புவோர் ஒரு ரூபாய் அனுப்பவும்.

ஏஜண்டுகள் தங்களுக்கு வேண்டிய காலண்டர் களுக்கு முன் பணத்துடன் ஆர்டர் செய்யவும்.

குண்டூசி காரியாலயம், 25, கிடங்குத் தெரு, சென்னை - 1.

ரூ. 1,000 சவால்

உலகத்தின் எட்டாவது அதிசயம்!

மெஸ்மரிஸ வசீகர கைக்குட்டை

(நிகரற்ற தயாரிப்பு)

இந்தக் கைக்குட்டை மெஸ்மரிஸ சக்திமூலம் தயாரிக்கப்பட்டதாகும். இதை வைத்துக் கொள்பவருக்கு அபாரமான சக்தி ஏற்படும். யாரையும் வசீகரப்படுத்தலாம். காதலில் வெற்றியும், வழக்குகளில் ஜெயமும், மற்றும் பரீக்ஷை, தொழில், வியாபாரம் இவைகளில் லாபகரமான பலன்களும் ஏற்பட்டு நீங்கள் தனவந்தர்கள் ஆகலாம்.

நீங்கள் விரும்பும் ஒருவரிடம் இந்தக் கைக்குட்டையைக் காட்டினால் போதும்; அவர் வசீகரம் ஆகிவிடுவார். உங்கள் விருப்பம் எதுவானாலும் வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் எதிரிகளாலும், கிரகக் கோளாறுகளாலும் ஏற்படும் ஆபத்துகளிலிருந்து உங்களைக் காப்பாற்றும். ஒருமுறை பரீக்ஷித்துப் பாருங்கள். முதலிரவே அதன் அற்புத சக்தி உங்களுக்குத் தெரியும். விலை ரூ. 1—15—0.

வெளிநாடுகளுக்கு 5 ஷில்லிங் (பி. பி. ஓ.) தபாற் செலவு தனி.

தயாரிப்பவர் :

THE PROFESSOR :

NEW SCIENCE OF MESMERISM

(G. M.) JULLUNDUR CITY.

பிரம்ம லோகம்

மங்களா

இம் மாதம் 22ம் தேதி பம்பாய், கல்கத்தா, டில்லி போன்ற பல வடநாட்டின் பிரதான நகரங்களில் ஜெமினியின் **மங்களா** ஹிந்திப் படம் திரையிடப் போவது நிச்சயமாகி விட்டது. இதற்கான விளம்பரம் வடநாட்டில் சிறந்த முறையில் இப்பொழுது நடைபெற்று வருகிறது. திரையிடும் தேதி நெருங்கி விட்டதால் ஸ்டுடியோ முழுவதும் இப்பொழுது இந்தப் படத்தின் வேலையில் தான் மூழ்கி இருக்கிறது. படத்தின் இறுதி வேலைகள் நடைபெற்று வருகின்றன. பானுமதி-ரஞ்சன் பிரதம பாகங்களில் நடிக்கும் இப்படத்தை ஸ்ரீ. எஸ். எஸ். வாஸன் தான் டைரெக்ட் செய்து வருகிறார். **மங்களா** தெலுங்குப் படமும் அதே தேதியில் திரையிடப்படும் என்று தெரிகிறது.

வனசுந்தரி

ஸ்ரீ கிருஷ்ணா பிக்சர்ஸின் **வனசுந்தரி** படப்பிடிப்பு முடிவடைய ஒன்றிரண்டு சிறு காட்சிகளே மீதம் உள்ளனவாம். அநேகமாக இப்படம் ஜனவரி வெளியீடாக இருக்கலாமாம். இப்படத்தின் மூலம் ஸி. ஆர். ராஜகுமாரி என்ற புது நாட்டிய நடிகை நல்ல பெயரை அடைவாரென்று தெரிகிறது. **சந்திரலேகா**வுக்குப் பின் ராஜகுமாரிக்கு இப்படத்தின் மூலம் புகழ் கிடைக்குமென்று தெரிகிறது. சின்னப்பாவுக்கு வெகு நூதனமான உடைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. மற்றும் டி. எஸ். பாலையா, வரலக்ஷ்மி, என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், புளிமூட்டை ஆகியோர் நடிக்கின்றனர்.

மணமகள்

என்னெஸ்கே பிலிம்ஸின் **மணமகள்** நியூடோனில் வளர்ந்து வருகிறது. சமீபத்தில் என். எஸ். கிருஷ்ணன் பள்ளிக்கூட வாத்தியாராகத் தோன்றும் ஒரு காட்சி படமாகியது. படத்தில் என்னெஸ்கேயின் நடிக கோஷ்டியுடன், லலிதா-பத்மினியும் பிரதம பாகங்களில் நடிக்கிறார்கள்.

பாதாள பைரவி

விஜயா ப்ரொடக்ஷன்ஸின் **பாதாள பைரவி** படப்பிடிப்பு அநேகமாக முடிவடைந்து விட்டதாம். படம் அடுத்த மாதம் ஆந்திர நாட்டில் திரையிடப் பெறுமாம். மாலதிக்கு, இப்படத்தில் நல்லதொரு பாகத்தில் நடிக்கும் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறதாம். கே. வி. ரெட்டியின் டைரெக்ஷனில் தயாராகி வரும் இப்படம் உடனுக்குடன் தமிழாக்கப்பட்டு வருவதாகவும் தெரிகிறது.

மர்மயோகி

பொங்கலன்று வெளிவரப் போகும் படங்களில் ஜூபிடரின் **மர்மயோகி** ஒன்றாகும். ஏற்பாடுகள் தடபுடலாக நடக்கின்றன. ராமநாத்-சேகர் தயாரிப்பான இப்படத்தில் அஞ்சலி தேவி, மாதுரிதேவி, எம். ஜி. ராமச்சந்திரன், சாமா, ஆகியோர் நடிக்கின்றனர்.

ஓர் இரவு

'மேனா'வின் மேற்பார்வையில் ஓர் இரவு தொடர்ந்து படமாகி வருகிறது. படத்தில் பி. கே. சரஸ்வதி, பி. எஸ். கோவிந்தன் இருவருக்கும் பதில் லலிதாவும், நாகேஸ்வர ராவும் நடிக்க ஏற்பாடு செய்யப்பட்டு, அவர்கள் சம்பந்தப்பட்ட காட்சிகள் கூட ஷூட்டிங் ஆரம்பமாகி விட்டது. மற்றும் கே. ஆர். ராமசாமி, பி. எஸ். சரோஜா முதலியோர் படத்தில் நடிக்கின்றனர்.

சந்திரவங்கா

ஜனவரியில் திரையிட வேண்டும் என்ற நோக்கத்துடன் **சந்திரவங்கா** தெலுங்குப் படம் ஜிதன் டைரெக்ஷனில் அதி துரிதமாகத் தயாராகி வருகிறது. கூடவே இக் கதை **சந்திரவதனா** என்ற பெயரில் தமிழ்ப் படமாகவும் தயாராகி வருகிறது.

அமரகவி

ஹரிதாஸ் படத்தில் கேட்ட இனிய சாரீரத்தை ஞாபகமூட்டுவதாக இருக்கிறதாம் **அமரகவி** படத்திற்காக பாகவதர் பாடியுள்ள சில பாட்டுக்கள். அவ்வளவு இனிமையாக இருக்கின்றனவாம்—இது வரை பதிவாகியுள்ள பாட்டுகள். இப்படத்திற்கென ராஜ குமாரிக்கு வெகு நேர்த்தியான பல உடைகளைத் தேர்ந்தெடுத்திருக்கிறார் டைரெக்டர் நாகூர்.

சிங்காரி

நேஷனல் புரொடக்ஷன்ஸின் **சிங்காரி** நியூடோனில் படமாகி வருகிறது. லலிதா—பத்மினி—ராகினி ஆகிய மூவரும் படத்தில் நடிக்கின்றனர். மற்றும், டி. ஆர். ராமச்சந்திரன், எஸ். வி. ஸஹஸ்ரநாமம், டி. பாலசுப்ரமண்யம், ஆகியோரும் நடிக்கின்றனர். ரகுநாத் இப்படத்தின் டைரெக்டர்.

காம சாஸ்திரம்

உலகத்தில் மிக்க அத்தியாவசியமான ஆண்—பெண் சேர்க்கையைப் பற்றிய 84 ஆசனங்களை உடைய, ரகசியக் குறிப்புகளுடன் கூடிய மிகவும் உயர்ந்த புத்தகம். 84 ஆசனங்களின் 200 வகை நிஜ போட்டோ படங்கள்; தனித்தும், சேர்ந்தும் பல்வகை முறையில் போகம் துய்ப்பதுமானவை. இப்புத்தகம் நீங்கள் இதுவரை அறிந்திராத பல ரகசியங்களையெல்லாம் வெளிப்படுத்துகிறது. கல்யாணம் ஆகாதவர்கள் இப்புத்தகத்திற்கு எழுதற்க. 1 புத்தகம் விலை ரூ. 2-12-0. ரகசிய போட்டோ பலவகை தோற்றத்தில் கிடைக்கும். 25 கார்டுகள் தனித்திருப்பது ரூ. 2-12-0. 50 கார்டுகள் சேர்ந்திருப்பது விலை ரூ. 5-0-0. ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

விலாஸம் :

M/S FRENCH PHOTO SUPPLY COMPANY (G.M.)

JULLUNDUR CITY.

தங்கம் இனாம்!

எங்கள் அமெரிக்கன் நியூ கோல்டு தங்கத்தை பிரபலப் படுத்துவதற்காக, நான்கு வைரப்பட்டை தீர்த்த வளையல்கள், ஒரு புது டிஸைன் நெக்லெஸ், ஒரு ஜோடி காதணிகள், இரண்டு பம்பாய் பாஷன் மோதிரங்கள் இவைகள் அடங்கிய ஒரு மாதிரிப் பெட்டியையும், இத்துடன் நான்கு தோலா நியூகோல்டு தங்கத்தையும் இனாமாக அளிக்க எங்கள் நிர்வாகிகள் தீர்மானித்துள்ளனர். இலவச நியூ கோல்டுக்கும் மாதிரிப் பெட்டிக்கும் இன்றே எழுதுங்கள். பிறகு ஏமாறவேண்டாம்.

IMPERIAL
COMMERCIAL CO.,
(G.M.) JULLUNDUR CITY

இந்தியாவில் மிகப் பெரிய
பட்டணம் பொடி தொழிற்சாலை

THE LARGEST SNUFF FACTORY IN MADRAS

N.V. SHUNMUGAM & Co.
MADRAS SNUFF
HIGHLY SPOKEN BY THE PUBLIC.

N.V.
ஷண்முகம் கம்பெனியார்
தபால் பெட்டி 555 — மதராஸ்.

நுனிப்புல்

[26-ம் பக்கத் தொடர்ச்சி]

உண்டு பண்ணும். சுற்றிச் சுற்றி வரும். தைரியமாக நிற்பவர்கள் சிலர்; நாய் தங்கள் சதையை ருசி பார்த்து விடுமோ என்று பயந்து ஓட்டம் பிடிப்பவரின் எண்ணிக்கைதான் அதிகம்!

மூக்கிய மனிதர் மூன்ருவது விரோதிதான். நக்ஷத்திரம் நடிகையானல் அவருடைய தாயாகவும், நடிகரானல் அவருடைய 'செகரெட்டரி'யாகவும் இருப்பார்கள். தம்மை நடிகரின் 'செகரெட்டரி' என்று சொல்லிக்கொள்ளும் அந்த நபர், பெரும்பாலும் நடிகருடன்கூட வெற்றிலைப் பெட்டியோ, கூஜாவோ தூக்கிக் கொண்டு போகும் ஆசாமியாக இருப்பார். நாய் குறைத்து அறிவித்ததும் பிரசன்னமாவார் இந்த மூன்ருவது விரோதி. இவர்கள் பார்த்து வடிகட்டி அனுப்பும் விசிறிக்குத்தான் நக்ஷத்திரத்தைப் பார்க்கவோ, அவருடன் பேசவோ பாக்கியம் கிட்டும். அநேகமாக நூற்றுக்குத் தொண்ணூற்று ஒன்பது பேர்கள் இவரால் வடிகட்டி திருப்பி அனுப்பப் படுவார்கள்.

மூன்ருவது விரோதியான நக்ஷத்திரத்தின் தாயார்கள் சாதாரணமாக நடந்து கொள்ளும் முறைதான் விசித்திரமானது. உதாரணமாக ஒரு நக்ஷத்திரத்தின் வீட்டில் நடக்கும் வழக்கத்தைச் சொல்லுகிறேன். நக்ஷத்திரத்தின் தாய் தன் மகளுக்குச்சொல்லிவைத்திருந்த சங்கேத பாஷை அது. ஒரு தரம் பெயர் சொல்லி அழைத்தால் வரவேண்டாம்—அதாவது விசிறியோ, அல்லது ஆதாயமற்ற ஒருவரோ வரும்போது! இரண்டுதரம் சேர்த்து அழைத்தால், வருவதும் வராததும் நக்ஷத்திரத்தின் அபிப்பிராயப்படி—அதாவது பத்திரிகைக்காரர்கள் வந்தால் இப்படி. மூன்று முறை அழைத்தால் உடனே வர வேண்டும். பட முதலாளியோ, பட டைரெக்டரோ, அல்லது வருகையினல் ஆதாயம் ஏற்படக்கூடிய ஒருவரோ வந்தால் தான் மூன்று முறை அழைப்பது!

—S.

134128

வருந்துகிருேம்

சினிமாப் பத்திரிகை உலகிலும், சினிமா உலகிலும் உழைத்து வந்த ஸ்ரீ. எஸ். ஜி. அய்யர் காலமான செய்தி கேட்டு வருந்துகிருேம். வக்கீல் பட்டம் பெற்ற இவர், சினிமாத்துறையில் சேவை செய்வதையே விரும்பிப் பாடுபட்டு வந்தார். முதன் முதலில் "ஸில்வர் ஸ்க்ரீன்" வாரப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார். பின்னர் அதிலிருந்து விலகி, தம் சகோதரருடன் "மூவி ஹெரால்ட்" பத்திரிகையை ஆரம்பித்து நடத்திஞர். ஸ்ரீ. அய்யர் "சந்திரகுப்த சாணக்கியா", "கங்காவதார்", "சூர்ய புத்திரி" "காளமேகம்" ஆகிய தமிழ்ப் படங்களுக்கு உதவி டைரெக்டராக இருந்திருக்கிருர்.

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India. Under No. CDL / 688

எக்காரணத்தினுலும் எத்தனை மாதமானுலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவருமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். விலை ரூ. 8-8-0 சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) ரூ. 10-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) (தபால் செலவு தனி)

கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)

Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவருது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்றதிவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்ப்ரவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (த. செ. தனி)

M/grs: SEENU & CO., Post Box, 1638, (6) MADRAS-1.

பிராஞ்ச்: 134 SERANGOON ROAD. சிங்கப்பூர்.

ஸிலோன் ஏஜண்ட் NEW COLOMBO MEDICAL STORES, 82. MAIN ST., கொழும்பு-11

Printed by P. ARUNACHALAM at Commercial Printing & Publishing House, 46, Armenian Street, Madras-1. Edited and Published by P. R. S. GOPAL (Gu[illegible]), at 25, Godown Street, Madras-1. Telephone: 4316.

பிரிய சகோதரிகளே!

நான் ஓர் நர்ஸ் அல்ல. டாக்டரும் அல்ல. எனக்கு வைத்தியமும் தெரியாது. நானே உங்களைப்போல் ஓர் குடித்தனப்பெண். எனது கல்யாணமான ஒரு வருடத்திற்குப்பின் துர்பாக்கியத்தினால் விகோரியாவும் (வெட்டை) சூதக வியாதியும் எனக்கு ஏற்பட்டு விட்டன. மாதவிடாய் நின்று விட்டது. அவ்வாறு ஏற்பட்டாலும் மிகுந்த வேதனையுடன் சொர்ப்பமாகவே வெளி வந்தது. வெள்ளை நீர் (ஸ்வேதப்ரதர்) அதிகம் வெளிவருவதால் தினம் தினம் மிகவும் பலவீனம் அதிகரித்துக்கொண்டே வந்தது. முகம் வெளுத்துவிட்டது. வீட்டு வேலை செய்யவும் முடியவில்லை. எப்பொழுதும் தலை கிறுகிறுப்பு இருந்து வந்தது. இடுப்பு வலியும் ஏற்பட என் சரீரமே கெட்டுவிட்டது. என் கணவர் நூற்றுக்கணக்கான ரூபாய் செலவு செய்து மருந்து வாங்கிக் கொடுத்தும் பலன் இல்லை. இரண்டு ஆண்டுகள் மிகுந்த துக்கத்துடன் ஓடி மறைந்தன. நல்ல காலமாக ஒருநாள் ஓர் சந்நியாசி பிச்சைக்காக என் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். நான் பிச்சைபோட வெளியில் வந்ததும், அவர் என் முகத்தைப் பார்த்து, "அம்மா, உனக்கு என்ன வியாதி? இந்த வயதிலேயே உன் முகம் பஞ்சுபோன்று இருக்கிறதே?" என்றார். நான் முழு விருத்தாந்தங்களையும் கூறினேன். அவர் என் கணவரைக் கூப்பிட்டு, ஓர் மருந்து சொன்னார். அம்மருந்தை 15 தினங்கள் சாப்பிட்டதும் என் முழு வியாதியும் தீர்ந்துவிட்டது. ஆண்டவன் அருளால் இப்பொழுது நான் பல குழந்தைகளுக்குத் தாயாக இருந்து வருகிறேன். இம்மருந்தினால் நூற்றுக்கணக்கான பெண்களுக்கு நன்மை செய்து வருகின்றேன். இந்த அற்புத மருந்தை இக்கொடிய ரோகத்தினால் வாடும் என் சகோதரிகளின் நன்மைக்காகவே அசல் விலைக்குக் கொடுத்து வருகிறேன். ஆண்டவன் எனக்குப் போதிய செல்வம் அளித்திருக்கிறார். இதன் மூலம் நான் லாபம் சம்பாதிக்க விரும்பவில்லை. ஒரு பெண்ணிற்கு 15 தின மருந்தின் அசல் விலை ரூ. 2-14-0 [ரூபாய் இரண்டு அணா பதினான்கு]. தபால் செலவு தனி.

இத்துஷ்ட ரோகத்தினால் பிடிக்கப்பட்டவர்கள் உடனே எழுதுங்கள். என் கையாலேயே மருந்து தயாரித்து, வி. பி. பி. மூலம் அனுப்புகிறேன். தர்மத்தின் பொருட்டு அசல் விலைக்கே மருந்து கொடுக்கப்படுகிறது. அவசியம் கவனிக்க: இந்த ரோகத்திற்குத்தான் என்னிடம் மருந்து உண்டு. மற்ற வியாதியைப் பற்றிய மருந்திற்கு எழுதவேண்டாம்.

BIBI CHARAN PIARI

SANT NAGAR (G.M.), JULLUNDUR CITY.

அமோகமான வரவேற்பு
அபரிமிதமான ஜனத்திரள்
அற்புத சக்திவாய்ந்த கதை

ஏழை படும் பாடு

சென்னை
காஸினோ
கிரௌன்
ஸரஸ்வதி

மற்றும் முக்கிய
இடங்களிலும்..

சென்னை தியேட்டர்களில்
தினசரி 3 காட்சிகள்
மாலை 2, 6 & 9-30 மணி

டைரக்ஷன்.. ராம்நாத்

பக்ஷிராஜா தயாரிப்பு
NARAYANAN Co Release